

பண்ணாகத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பேரம்பலம் அப்பாப்பிள்ளை
# இராமசாமி (அப்பர்)

அவர்களின் சிவபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.09.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பண்ணாகத்தினை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பேரம்பலம் அப்பாப்பிள்ளை
# இராமசாமி (அப்பர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாள் என் செய்யும், ? வினைதான் என் செய்யும்? எனை நாடிவந்த
கோள் என் செய்யும்? கொடும் கூற்று என் செய்யும்? குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
16.05.1926

விண்ணில்
31.08.2021

அணைந்தும் அணையாத தீபம்

அமரர்

# அப்பாப்பிள்ளை இராமசாமி

அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு பிலவ ஆவணி அபரபக்க நவமியிலே
பூண்டபுகழ் இராமசாமி பெரியவரும் - மீண்டுவரா
விண்ணுலகம் சென்றார் விமலனடி தேடி
மண்ணுலகப் பற்றை விடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை .

### திருக்கோவில்களில் ஓதப்படும் பஞ்சபுராணம்

### தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

### திருவாசகம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

மற்றுநீ வன்மை பேசி
வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற்
பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே யாகும்
ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் ...... எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு ...... மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு ...... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடஞ் மேவிய ...... குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற ...... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் ...... நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் ...... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய ...... பெருமாளே.

## வாழ்த்து – கந்த புராணம்

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். (01)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். (02)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். (03)

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். (04)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். (05)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். (06)

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். (07)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். (08)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். (09)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். (14)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். (16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (17)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (18)

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். (19)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்த்த உற்சவங்களில் சுண்ணமிடிக்கும் போது பாடும் திருவாசகம்

## திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (01)

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமின்எம் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. (02)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்தும் நாமே. (03)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (04)

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (05)

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (06)

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பரா பரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (07)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (08)

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (09)

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (10)

மாடு நகைவாள் நிலாஎ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. (12)

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்க ளப்பன்
எம்பெரு மான்இம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (13)

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇ ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (14)

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொ டியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. (16)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. (17)

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. (18)

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயி னாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. (20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த சஷ்டி கவசம்

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள்
கந்தர் சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடம் செய்யும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலாய் எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரகணபவச ரரரர ரரர
ரிகண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீராநமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென்
வசர ஹணபவ வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசங்குசமும்
பரந்த விழிகள் பன்னிர ண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயம் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தினமாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொக மொக மொகமொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடுடு டுடுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகு டகு டிகு டிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முரகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்றும்
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலைவைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினைக் காக்க
விரிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங்கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம் பெறக்காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடையழகுற செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில் வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரலடியினை அருள் வேல் காக்க
கை களிரண்டும் கருணை வேல் காக்க
முன் கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வஜ்ஜரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழங்கடை முனியும்
கொள்ளிவாற் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராட்ச தரும்
அடியனைக் கண்டால் அலறிக கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிரும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள்ளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கை கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து சுர் வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்தரணை பருஅரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக்கு அருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எ னக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாக
உன்னைத் துதித்த உன்திருநாமம்
சரவணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகழொளிபவனே
பரிபுரபவனே பவமொழிபவனே
அரிதிருமுருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடும் சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாள் பாலகுமரா
ஆவினன் குடிவாள் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முரகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள் செய்
கந்தசஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவதுமாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுரு கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரென்மர் செயலதருள்வர்
மாற்றலாரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீரெட்டாய் வாழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் கை வேலாம் கவசத்தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலெக்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகள் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனகசபைக்கோர் அரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய கந்தர் அநுபூதி

காப்பு

நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.

நூல்

ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே.

உல்லாச, நிராகுல, யோக இதச்
சல்லாப, விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா சுரபூ பதியே.

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே.

வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்
தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?
கிளைபட்டு எழு சூர் உரமும், கிரியும்,
தொளைபட்டு உருவத் தொடு வேலவனே.

முக மாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந் தொழிந்திலனே
ஆகம் மாடை, மடந்தையர் என்(று) அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணியான மனோ சிலை மீது, உனதாள்
அணியார், அரவிந்தம் அரும்பு மதோ?
.. பணியா? .. என, வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயா பரனே.

கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

ஆமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பெரு தானவ நாசகனே.

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?
தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்
நிட்டூர நிராகுல, நிர்பயனே.

கார் மா மிசை காலன் வரில், கலபத்
தேர்மா மிசை வந்து, எதிரப் படுவாய்
தார் மார்ப, வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கூகா என என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

சேம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான், இறவான்
சும்மா இரு, சொல் அற .. என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன், தனிவேல் முனி, நம் குரு ... ஏன்று
அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ
உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,
இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே.

(கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே, ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.

(முருகன், குமரன், குகன், என்று மொழிந்து
உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்
பொரு புங்கவரும், புவியும் பரவும்
குருபுங்கவ, எண் குண பஞ்சரனே.

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா, முது சூர் பட வேல் எறியும்
சூரா, சுர லோக துரந்தரனே.

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்
தாமே பெற, வேலவர் தந்ததனால்
பூ மேல் மயல் போய் அறம் மெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர், நடவீர் இனியே.

உதியா, மரியா, உணரா, மறவா,
விதி மால் அறியா விமலன் புதல்வா,
அதிகா, அநகா, அபயா, அமரா
பதி காவல, சூர பயங் கரனே.

திணியான மனோ சிலை மீது, உனதாள்
அணியார், அரவிந்தம் அரும்பு மதோ?
.பணியா? .. என, வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயா பரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பெரு தானவ நாசகனே.

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?
தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்
நிட்டூர நிராகுல, நிர்பயனே.

கார் மா மிசை காலன் வரில், கலபத்
தேர்மா மிசை வந்து, எதிரப் படுவாய்
தார் மார்ப, வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கூகா என என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே, மணியே, பொருளே, அருளே,
மன்னே, மயில் ஏறிய வானவனே.

ஆனா அமுதே, அயில் வேல் அரசே,
ஞானாகரனே, நவிலத் தகுமோ?
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே.

செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று
ஒவ்வாதது என உணர்வித் ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.

பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.

கலையே பதறிக், கதறித் தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே, மலை கூறிடு வாகையனே.

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா, முருகா, கருணாகரனே.

(சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல, சண்முகனே
கங்காநதி பால, க்ருபாகரனே.

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க் கழல் என்று அருள்வாய்?
மதி வாள்நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா, சுர பூபதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதா, குமரா நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

ஆதாளியை, ஒன்று அறியேனை அறத்
தீது ஆளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கு இறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே.

மாஏழ் சனனம் கெட மாயைவிடா
மூஏடணை என்று முடிந்திடுமோ
கோவே, குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

வினை ஓட விடும் கதிர் வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ?
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு திரிந்தவனே.

சாகாது, எனையே சரணங் களிலே
கா கா, நமனார் கலகம் செயும் நாள்
வாகா, முருகா, மயில் வாகனனே
யோகா, சிவ ஞான உபதேசிகனே.

(குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது சொல்லு மதோ?
வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெம்
காடும், புனமும் கமழும் கழலே

கரவாகிய கல்வி உளார் கடை சென்று
இரவா வகை மெய்ப் பொருள் ஈகுவையோ?
குரவா, குமரா, குலிசாயுத, குஞ்
சரவா, சிவயோக தயாபரனே.

எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா, கதிர் வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறை நாயகனே.

ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.

அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து. இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே.

தன்னந் தனி நின்றது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?
மின்னும் கதிர் வேல் விகிர்தா, நினைவார்
கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிகெட்டு அறவாடி, மயங்கி, அறக்
கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன்?
நதி புத்திர, ஞான சுகாதிப, அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே.

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

## குமரகுருபர் சுவாமிகள் அருளிய சகலகலாவல்லிமாலை

**காப்பு**

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள், என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளையுள்ளம்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து,
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக,உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகலகலாவல்லியே! 01

நாடும் சொற்சுவை பொருட்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய்! பங்கய ஆசனத்தில்
கூடும் பசும்பொற்கொடியே! கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே! சகலகலாவல்லியே! 02

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடுங்கொலோ?உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழைசிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே! சகலகலாவல்லியெ! 03

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய்! வடநூல் கடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சுஅப்பு, இதம்தரும், செய்ய,பொற்பாதபங்கேருகம் என்
நெஞ்சத்தடத்து அலராதது என்னே? நெடுந்தாள் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசு ஒத்திருந்தாய்! சகலகலாவல்லியே! 05

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலும்,அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகலகலாவல்லியே! 06

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி உன்கடைக்கண்நல்காய்! உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப்பேடே! சகல்கலாவல்லியே! 07

சொற்விற்பன்னமும், அவதானமும், கல்விசொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்!நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெறுஞ்செல்வப்பேறே! சகலகலாவல்லியே! 08

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தில் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம்நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே! சகலகலாவல்லியே! 09

மண்கண்ட, வெண்குடைக்கீழாக, மேற்பட்டமன்னரும், என்
பண்கண்ட அளவில், பணியச்செய்வாய்! படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்,விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகலகலாவல்லியே 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேதார கௌரி விரத பாடல்

காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணீயல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமான் ஊஞ்சல் பதிகம்

காப்பு

வெற்றி வடிவேல் விசவத்தனை முருகன்
நற்றமி ழூஞ்சல் நவிலுவதற்கு - பொற்கமல
பாதந்தந் திந்நேரம் பார்த்தருள்செய் வாய்விந்து
நாதவடி வைங்கரனே நன்கு,

ஓவாது பலபிறவி யெடுத்தும் மாய்ந்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியும் வண்ணம்
மேவாஎன் மரநெஞ்சைப் பலகை யாக்கி
விதியென்னும் கயிறதனா லணைத்துப் பூட்டித்
தேவானை வள்ளியொடும் ஆடி ரூசல்
செம்மைநெறிச் செல்லமகிழ்ந் தாடீ ரூசல்
மூவாதே வாழ்விசவத் தனைமுன் னோனே
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

குன்றுதொறு மெழுந்தருளுங் குமரா நெஞ்சக்
குன்றிலெழுந் தருளுவது தகாது கொல்லோ
நின்றிருந்து கிடந்துநடந் தெந்நே ரத்தும்
நின்னடியே தொழும்பெரிய நெறியைத் தாராய்
இன்றிருந்து நாளையிறந் தவம்போ காமே
எழில்விசவத் தனைப்பதியிற் கோவில் கொண்டு
முன்றினில்வந் துளமுருகு வோரைக் காக்கும்
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்.

இந்திரனுந் திருமாலும் இருபா லாட
இருமருங்கும் அவர்மகளிர் தழுவிக்கூட
சந்திரனோ டாதவன்விண் முகட்டை மூடச்
சாருமடி யவரன்பு மாலை சூடச்
தந்தனமென் றருள்வரத நடனமாடுந்
தலம்விசவத் தனையாக்கி எம்மை வாட்டும்
முந்துவினை வெயிற்குநிழல் விடுத்துக் காக்கும்
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டுமின்பக் கவிபொழியும் ஔவை கர்வம்
துடைத்தருள அவர்சென்ற வழியின் ஓர்பால்
கட்டுவெயில் வேளையினிற் சிறுவ னாகிக்
கனிநாவல் மரத்திலிருந் தன்னார் கேட்கச்
சுட்டபழம் சுடாதபழம் எவைதாம் வேண்டும்
சொல்களனத் திகைக்கச் செய்தருளால் ஞான
மொட்டலர்த்தி யருள்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

சூரபன்மன் சிங்கமுகன் தார கன்பேர்த்
தொல்லசுரர் குலந்தன்னை நினைத்த அந்த
நேரமதில் நீறாக்க முடியு மெனும்
நீரேனோ செருக்களத்தில் ஆறுநாளாய்ப்
போரதனைச் சேனையுடை சூழ நின்று
புரிந்தீரிஃ துமதுவிளை யாட்டோ என்ன
மூரல்புரிந் தருள்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

கன்னியின்மே லோரிளைஞன் மையல் கொண்டு
காதல்வலைப் பட்டுழலும் பான்மை போல
அன்னையிச்சா சக்தியென்யும் வள்ளியம்மை
அருள்பெறநீர் மயங்கியுலைந் தீரே என்பார்
இன்னமுதற் தமிழரின்ப மணமிஃ தென்றே
எடுத்துரைக்கும் செயலன்றோ இனிமை வாய்ந்து
முன்னுமெழில் தவழ்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

தேவருக்கும் உணர்வரியாய் ஆடீ ரூசல்
சீரடியார் உணர்பெரியாய் ஆடீ ரூசல்
பாவலர்செந் தமிழ்ப்பாடல் கேட்டு லீலை
பலபுரிந்த தமிழ்முருகா ஆடீ ரூசல்
நாவலமில் குமரகுரு பரகுக் கந்நாள்
நாவிலிருந்து தருள்நூல்கள் பாடச் செய்தாய்
மூவருமாய் அருள்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருணைக் கோபுரத்தில் நின்றும் வீழ்ந்து
செத்தொழியா தருணகிரி நாதர் தம்மைக்
குருவடிவாய்த் தோன்றியணை தேந்திக் காத்துக்
குலவுதிருப் புகழமிர்தம் நல்கச் செய்தாய்
அருமையுறு பண்பெதும் இல்லா நாயேன்
அடியிணையே தஞ்சமென அடைந்தேன் காப்பாய்
முருகலரும் பொழில்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

ஈச்சியப்ப சுவாமிகளுக் கருளிப் பத்தி
கனிந்தசுவை நிறைகந்த புராணங் கேட்டாய்
இச்சகத்தில் கோழியன்றிக் குஞ்சு பாடேன்
என்றபொய்யா மொழிப்புலவன் கர்வம் போக்க
அச்சுரத்தில் நின்றருளி முட்டை பாடும்
ஆளாக்கி விளையாடல் பலவும் செய்தாய்
முச்சகமும் புகழ்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

இன்னமுதற் தமிழ்ப்புலவா ஆடீ ரூசல்
இலங்குபுள்ளி மயில்வலவா ஆடீ ரூசல்
கன்னியருக் கொருமுதல்வா ஆடீ ரூசல்
கௌரிமகிழ் தருபுதல்வா ஆடீ ரூசல்
மன்னுமருட் பெருமலையே ஆடீ ரூசல்
வாழ்வழிக்கும் திருநிலையே ஆடீ ரூசல்
முன்னுமெழில் தவழ்விசவத் தனையில் அப்பா
முருகாஎம் பெருமானே ஆடீ ரூசல்

ஆக்கம்
பண்டிதர் அ.ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த அப்பாப்பிள்ளை இராமசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு

"தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்கின்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க ஈழவள நாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிவபூமியாம் யாழ்ப்பாணத்திலே, வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பண்பாளர்கள் வாழும் பண்ணாகம் மண்ணிலே வாழ்ந்த சிறந்த கமக்காரரும் பிரபல வர்த்தகருமாகிய பேரம்பலம் அப்பாப்பிள்ளை என்பவருக்கும் அன்னாரின் உறவுப்பெண் அப்பாப்பிள்ளை செல்லம்மாவிற்கும் நான்காவது புதல்வராக 16.05.1926 இல் அப்பாப்பிள்ளை இராமசாமி பிறந்தார். இவர் தமையன் பண்டிதர் ஆறுமுகம், தமக்கையர்களாக திருமதி இராசம்மா, திருமதி பொன்னம்மா என்போரும் இளைய சகோதரர்களாக திரு.பொன்னம்பலமும், திருமதி.மனோன்மணி அவர்களும் வந்தமைந்தனர்.

அமரர் அப்பாப்பிள்ளை இராமசாமி தனது சிறுவயதிலிருந்தே அன்பும் எளிமையும் பாசமும் செறிந்து விளங்கும் குணசீலராக விளங்கினார். பிறந்தது முதலே சைவ உணவுப் பழக்கத்தினையே கைக்கொண்ட இவர் "உணவே தான் மருந்து" என்றதன் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில் வாழ்ந்து காட்டினார். தனது பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் என்போரை மட்டுமன்றி ஊரிலுள்ள அனைவரையுமே தன் இரத்த உறவுகள் போல பாவித்து அன்பும் பாசமும் பாராட்டி ஊரிற்கே "ஆசை ஐயாவாக" வாழ்ந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய இவர் தனது கல்வியை யா பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலத்தில் பயின்றதுடன் எஸ்.எஸ்.சி. வகுப்பு வரை பயின்று சித்தி பெற்றார். பின்னர் அவர் வர்த்தகத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினாலும் குடும்ப சூழ்நிலையினாலும் தனது பதினேழு வயதினிலிருந்தே தன் தந்தையான பேரம்பலம் அப்பாப்பிள்ளையின் தேங்காய் வியாபாரத்தில் முழு மூச்சாக ஈடுபட்டதுடன் தனது இறுதி நாள் வரை சங்கானையில் உள்ள தன் தேங்காய் கடை திறந்தே இருக்க வேண்டும் என திண்ணம் கொண்டு அது போலவே இறுதி நாள் வரை உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தான் வசிக்கும் இல்லத்தினை தன் உழைப்பினாலேயே கட்டி முடித்து கம்பீரமாக வாழ்ந்தார்.

இவர் பண்ணாகம் திரு.திருமதி நாகலிங்கம் தம்பதியினர் பெற்றெடுத்த உறவுப் பெண்ணான பொன்னம்மா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்கள் புரிந்த இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக நிர்மலாதேவி, லோகேஸ்வரிதேவி, ஜெயதேவி என மூன்று புதல்விகளை பெற்றதுடன் அவர்களை நன்றாக கல்வி புகட்டி ஒழுக்க சீலர்களாக வளர்த்ததுடன் இவரின் இரண்டாவது மகள் லோகேஸ்வரி சிறிது காலம் ஆசிரியராக பணியாற்றியதுடன் கடைசி மகள் ஜெயதேவி ஆசிரியர் கலாசாலைக்கும் தேர்வு செய்யப்பட்டனர். தனது புதல்விகளிற்கு உரிய நேரத்தில் சீரும் சிறப்புமாக மணம் முடித்து வைத்தார்.

அதன்படி தனது முதலாவது புதல்வியான நிர்மலாதேவியை பண்ணாகத்தினைச் சேர்ந்த நமசிவாயம் முத்துலிங்கம் என்பவரிக்கு மணம் முடித்து வைத்ததுடன் அவர்களின் புதல்வர்களான பாபுஜி, சஜீவன், சங்கீதா, நிரோஜன், கார்த்திகா என பேரக்குழந்தைகளையும் கண்டு இன்புற்றார். தன் இரண்டாவது மகள் லோகேஸ்வரிதேவியை சங்கானையினைச் சேர்ந்த சின்னத்துரை குகதாசனிற்கு திருமணம் புரிந்து வைத்து அபிராமி, சாரங்கன், ஆரணி என பேரக் குழந்தைகளை கண்டு மகிழ்ந்தார். தன் கடைசி மகளான ஜெயதேவியை பண்ணாகத்தினை சேர்ந்த பொன்னம்பலம் சிவபாலன் என்பவரிற்கு காதல் திருமணம் செய்து வைத்து (தற்போது சுவிஸில் வசிக்கின்றனர்) அலெக்ஸ், சோபிகா என்ற பேரக் குழந்தைகளையும் கண்டார் தன்னுடைய புதல்வர்களிற்கு மட்டும் தந்தையாக அல்லாது அவர்களுடைய புதல்வர்களிற்குத்கூட தந்தையாகவும் தாயுமானவராகவும் விளங்கியதுடன் அவர்களை நன்றாக கல்வி புகட்டி சீரும் சிறப்புமாக ஒழுக்க சீலர்களாக வளர்த்தெடுத்து பட்டங்கள் பல பெறுவதனை கண்டு தானும் மகிழ்ந்தார். மேலும் தனது பேர்த்தியான சங்கீதாவை உதவி பிரதேச செயலராக ஆக்கியதுடன் அவரிற்கு கோகுலதர்சனை மணம்முடித்து வைத்து திருமணத்தைப் பார்த்து மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் பாசம் அவர் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளிற்கு மாத்திரம் உரித்தாகவில்லை. தன் சகோதரர்களின் பிள்ளைகளையும் அவர்களது பிள்ளைகளையும் கூட தன்னுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் போலவே எண்ணி வெள்ளை உள்ளத்தோடு எந்தவொரு எதிர்பார்ப்பினையும் வேண்டாது பாசத்தை அள்ளி பொழியும் தாயுமானவராகவே விளங்கினார் "அன்பின் வழியை தேர்ந்தெடுப்பவர்கள் ஒரு நாளும் வீழ்ந்து போவதில்லை" என்பார்கள். அது போலவே ஊரிற்கே ஆசை ஐயாவாக அமரர் அப்பாபிள்ளை இராமசாமியும் வாழ்ந்து வழிகாட்டினார்.

அமரர் அவர்கள் பண்ணாகம் கிராமத்திலுள்ள ஐக்கிய நாணயசங்கம், பண்ணாகச் விசவத்தனை கோயிலின் தர்மகர்த்தா சபையில் ஓர் அங்கத்தவராக வாழ்ந்ததுடன் ஊருடன் ஒத்து வாழ வேண்டும். என்கின்ற வகையில் நட்புப் பாராட்டியே வாழ்ந்தார். தன் தமையனான பண்டிதர் ஆறுமுகம் அவர்களுடைய கல்விப் பணிக்கும் தன்னாலான பங்களிப்பினை எப்போதுமே வழங்கி வந்தார் தன் வீட்டின் அருகிலுள்ள வைரவப் பெருமானான செம்பரத்தை வைரவரை நாள் தோறும் அதிகாலை சென்று வழிபடும் பழக்கம் கொண்டிருந்தார்.

"வாழ்தல் ஓர் மிகப்பெரும் கலை" என்பார்கள். அது போலவே அமரர் அப்பாப்பிள்ளை இராமசாமியும் தன் வாழ்க்கையை வரண் முறைகளோடு அமைத்து வாழ்ந்து காட்டி வழிகாட்டியாக விளங்கினார். அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்பும் பழக்கமாகட்டும். வெறும் வயிற்றில் சுடுநீர் அருந்தும் பழக்கமாகட்டும். மூன்று நேரம் மட்டுமான உணவுப் பழக்கம் தினமும் கோயில் செல்லும் பழக்கம் தினசரி செய்தித்தாள் படிக்கின்ற பழக்கம் தவறாது அமாவாசை, பௌர்ணமி விரதம் பிடிக்கும் பழக்கம் என அத்தனை செயல்களையும் செய்து காட்டி கற்றுக் கொடுத்து வழிகாட்டியாக நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தனது இறுதிக்காலம் வரை ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் தனது வேலையை தானே செய்தும் தன் கையில் நின்று வாழ்ந்தார். ஒருவருடைய ஆகப்பெரும் அதிஷ்டம் என்பது அவறிற்கு அவனுடைய விருப்பம் போல இறப்பு கிடைப்பதென்பர் அது போலவே எப்பொழுதும் அவர் கூறுவது போலவே தன் இறுதி நாள் வரை வழமை போன்று இத்தனை செயல்களையும் தன் கையால் தானே செய்து படுக்கை என்றோ நோய் என்றோ ஒரு நாளும் அறியாத அந்த ஜீவன் 95 வருடங்கள் வாழ்ந்தார். பிறக்கும் போதே இறப்பும் நிச்சயிக்கப்பட்டது என்பார்கள். கடவுளும் தன் கணக்கினை ஒரு நாளாக யாருமே எதிர்பார்க்காத நாளில் 31.08.2021 அன்று இரவு 10.15 மணியளவில் பேரப்பிள்ளைகளுடன் கதைத்துக் கொண்டே இருக்கும் பொழுது பறித்துக் கொண்டுசென்றார்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்கின்ற பொய்யாமொழி புலவரின் வாக்கின்படி வாழ்வின் அத்தனை பாக்கியங்களையும் பார்த்த ஆயிரம் பிறைகளை கடந்த குலசாமி சொர்க்கத்தினுள் அடைக்கலம் அடைந்தார் அடைக ஆத்மா சாந்தி !

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேங்காய் விற்பனர் அமரர். இராமசாமி அமரத்துவமடைந்தார்.**

'பலவாம் உலகும் நொடிப்பொழுதில் படைத்த பிரமன் சிந்தித்துப் பன்னாள் முயன்று பண்ணியதால் பண்ணாகப் பேர் பெறுபதியின் கண்ணாகப் புகழ் பூத்தவர். அப்பாப்பிள்ளை இராமசாமியாவார். தங்கமாமணியாயும் மாணிக்கமாயும் வயிரமாயும் பவளமாகவம் பண்பின் சிகரமாயும் எளிமையின் வடிவமாகவும் நேர்மையின் திருவுருவமாகவும் தேங்காய் வியாபார உழைப்பில் தொழில் நுட்பம் சேர்ந்தவராயும் செல்வந்த வளத்தில் பணிவு நிறைந்தவராகவும் அன்பின் பெட்டகமாயும் மனித நேயத்தின் கருணை மிகுந்தவராயும் அன்னார் விளங்கினார். உறவினர்க்கு உள்ளத்தால் பொய்யாத உத்தமராக துலங்கினார் தாம் எளிமையாக வாழந்து உறவினர்க்கும் ஊரவர்களுக்கும் செல்வங்களையும் இனிய வார்த்தைகளையும் அள்ளி வழங்கினார். இராமசாமி அவர்களுக்கும் பெற்றோர் சூட்டிய செல்லப் பெயர் "அப்பர்" அப்பர் என்னும் வார்த்தை தெய்வீகத்தன்மை நிறைந்தது. ஊரிலுள்ளோரும் மற்றோரும் தேங்காய் அப்பர் என்று ஆவலோடும் பண்போடும் அழைத்தனர்.

அமரர்களான அப்பாப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வனாக அப்பர் தோன்றினார். சிக்கனமான வாழ்வில் சீரும் சிறப்புமாக அப்பர் வளர்ந்தார். மரக்கறியுணவுகளை உண்ணும் சைவக்காரராக விளங்கினார். பணிவும் அன்பும் காட்டுகின்ற பண்பாளனாக மிளிர்ந்தார்.

தமது தந்தையின் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து பிரபல தேங்காய் வியாபாரியாகப் புகழ் பெற்றார். வளமான வாழ்வும் செல்வமும் அன்னாரின் அரவணைப்பில் பூத்துக் குலுங்கியது.

அப்பர் அவர்களின் மூத்த அண்ணாவாக அமரர் பண்டிதர் ஆறுமுகனாரும் செல்லத் தம்பியாகப் பொன்னம்பலம் அமரரும் ஆசை அக்காமாராக அமரர் திருமதி. இராசம்மா நாகலிங்கம் அவர்களும் அமரர் திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் அவர்களும் சிங்காரத் தங்கையாக அமரர் திருமதி மனோன்மணி பாலசுப்பிரமணியமும் விளங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அப்பர் அவர்கள் தமது சகோதரர்களுடனும் சகோதரிகளுடனும் அவரவர் பிள்ளைகளுடனும் மகிழ்ந்து குலாவிப் பாசத்தோடும் பரிவோடும் திகழ்ந்தார்.

இராமசாமி அவர்கள் தமது தாய்மாமனாரின் மூத்த மகளான அமரர் பொன்னம்மா அவர்களைத் திருமணம் புரிந்தார். நல்லறத்தால் பெருந்தவம் செய்து முப்பெரும் தேவிகளான நிர்மலாதேவியையும், லோகேஸ்வரிதேவியையும், ஜெயதேவியையும் பெற்றெடுத்து வளமாக வாழ்ந்தார்கள். முப்பெருந்தேவியரும் திருமணம் புரிந்து அருமையான அறிவுள்ள கண்மணிகளான பேரனார், பாபு அவர்கள் சைவ ஆசார சீலனாகப் பண்போடும் புகழோடும் வாழ்கிறார். சங்கீதாவின் திருமண நிகழ்வில் அமரரான அப்பர் கலந்து ஆசிர்வதித்தார். அபிராமிப் பேத்தியின் சட்டவல்லுனத் தன்மையை கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். ஜெயதேவியின் இல்லறவாழ்வும் சுவிஸ் நாடாகிய வெளிநாட்டு வாழ்வும் பிள்ளைகளின் கல்விச்சிறப்பும் பெருமையுமறிந்து அமரர் மனமகிழ்ந்தார். முப்பெருந்தேவிகளின் வளமான வாழ்வும் சிறப்பும் அமரரின் நெஞ்சத்துக்குப் பெரு வித்தாக அமைந்தன. யாருக்கும் தீங்கு எண்ணாத பெருமகனாக வாழ்ந்தார். உற்றோருக்கும் ஊரவர்க்கும் அன்பு வார்த்தைகளும் ஆசிர்வாதங்களும் செய்து எல்லோருக்கும் ஆசை ஐயாவாகவும் ஆசையாகவும் அழைக்கின்ற ஆசையாவாகவும் விளங்கினார். அன்னாரின் சகோதரிமார்களின் பிள்ளைகள் அன்போடு ஆசையம்மான் என்று அன்னாரை அழைப்பார்கள்.

எல்லோருக்கும் இனியவராகவும் எளிமையான வாழ்வு பெற்றவராகவும் அன்பின் வடிவமாகவும் வைரவப் பெருமானின் நாளாந்தக் கண்காட்சிச் தரிசனத்துடனும் விசவத்தனை திருமுருகனின் கருணையுடனும் தொண்ணூற்றைந்து ஆண்டுகள் நிறைவு செய்து அண்மித்த வேளையில் இறைவனின் அழைப்பும் காலதேவனின் கணக்கும் சரியாக நிறைவு பெற்றமையால் இறுதிவரையும் தமது பிள்ளைகளுடன் கதைத்துக் கதைத்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் தந்தையார்
## பேரம்பலம் அப்பாப்பிள்ளை



## அமரரும் அவரது உடன்பிறப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தனது குடும்பத்தினருடன்




## அமரர் தனது கடைசி மகள் குடும்பத்தினருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தனது மூத்த மகளின்
பூப்புனித நீராட்டு விழாவில்



அமரர் தனது கடைசி மருமகள்
சாந்தாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தனது கடைசிமகளுடன் சங்கானையில் உள்ள அவரது தேங்காய்கடையில்



## அமரர் தனது பேத்தியின் பிறந்த தினத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தனது உடன்பிறப்புக்களுடனும் மருமகளுடனும்



## அமரர் தனது பெறாமக்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தனது பேரப்பிள்ளைகளின் பிறந்த தினத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தனது பேரப்பிள்ளைகளுடன்




## அமரர் தனது பேர்த்தியின் திருமணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தனது பேர்த்தியின் பிறந்ததினத்தில் குடும்பத்தினருடன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தனது பேரப்பிள்ளைகளுடன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பிறைகளுக்கு மேலாகக் காட்சிகளும் பெருமானின் வலக்கால் திருவடிகளை நண்ணிச் சுவாமியானார். அமரர் அப்பாப்பிள்ளையின் அரும்பெரும் குலவிளக்குக் கடவுளோடு கடவுளாக கலந்து பேரொளியாகத் திகழ்கிறது. எங்கள் தலைவன் இராமசாமியை ஏத்திப் போற்றுவோம். ஆத்மசாந்திக்கு இறை பிரார்த்தனை செய்வோம். பல்லாண்டு, பல்லாண்டு பாடி விசவத்தனை வேலனின் திருப்பாதங்களையும் செம்பரத்த வைரவப் பெருமானின் திருவடிகளை பொங்கல் பொங்கியும் திருமுழுக்குச் செய்தும் கொண்டாடுவோம். வாழ்க இராமசாமி, இராமசாமியின் வாழ்வானது உறவினர்க்கும் ஊரவர்க்கும் மற்றோருக்கும் பேரிலக்கியமாகும். வரலாற்றுக் கலங்கரை விளக்கமாகும். இராமசாமி எங்களுக்கும் பேரிலக்கியம் என்பதை ஆத்மார்த்தமாக எடுத்துரைக்கின்றேன்.

அன்புடன்
அப்பாப்பிள்ளையின் உறவினர்
ஆக்கம்.ஆ.விவேகானந்தன்
நோர்வே
06.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் ஆசையய்யா எமக்கு வழிகாட்டி

அன்பும் பண்பும் ஒற்றுமையும் நிறைந்த பண்ணாகமூரின் உயர்ந்த மனிதனாக வாழ்ந்து வழிகாட்டியாக விளங்கியவர். எங்கள் ஆசையய்யா இறைவனுடன் சேர்ந்த அப்பாப்பிள்ளை, இராமசாமி அவர்கள் எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

வணிக நுணுக்கமும் ஈரமான நெஞ்சும் அன்பும் பண்பும் பாசமும் ஆசையய்யாவிடம் அதிகமாக இருந்தன. என்னிடத்திலும் எனது சகோதர்களிடத்திலும் உறவினர்களிடத்திலும் ஆசையய்யாவின் இரக்கத்தையும் பாசத்துடிப்பையும் கண்டு மகிந்தேன். எனக்கோ மற்றவர்க்கோ எது தேவையென்றாலும் கேட்காமலே எமக்கு வாங்கித் தருவார் எமது ஆசையய்யா. தமது பிள்ளைகள் போன்று எம்முடன் பாசத்தோடு அரவணைத்த ஆசையய்யாவை என்னால் மறக்க முடியாது. கடவுளிடம் சென்ற ஆசையய்யாவும் குஞ்சைய்யாவும் எமக்கு இரு கண்களைப் போன்றவர்கள். நானும் மற்றவர்களும் உயர்வாக வாழ்வதற்கும் முன்னேறுவதற்கும் காரணமாக அமைந்தவர்களாக ஆசைய்யாவும் குஞ்சையாவும் விளங்குகிறார்கள். இரண்டாம் அறுசுவையுண்டி நிறுவனத்தின் பொறுப்பாளராக நான் உயர்வதற்கு ஆசைஐயாவின் வணிக நுட்பமும் அன்பும் இரக்கமும் ஒற்றுமையும் காரணங்களாக அமைந்தன. எனக்கு மட்டுமல்ல தொழிலில் முன்னேறும் ஒவ்வொருவருக்கும் ஆசைய்யாவின் வழி முறைகள் முன்மாதிரியாக இருக்கும். தொன்னூற்றைந்து ஆண்டுகள் நல்ல முறையில் வாழ்ந்து எல்லோருக்கும் உயர்ந்த மனிதனாக வழிகாட்டி எங்கள் ஆசைய்யா இயற்கையோடும் இறைவனோடும் சேர்ந்தார். தவம் குடும்பத்தினர்கரும் தேவி குடும்பத்தினர்க்கும் ஜெயதேவி குடும்பத்தினர்க்கும் அனுதாபங்களையும் ஆறுதலையும் கூறுகிறேன்.

அன்புடன்
பெறாமகன் ஆ.சிவானந்தன், லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீரென தவறிய எமது சொத்து

எங்களின் மிகப்பெரிய சொத்து ஆசையா திடீரென்று தவறிய செய்தி கேட்டு சொக்கிப் போய் விட்டேன் இன்னொரு பிறவி இருந்தால் எனது பேரப்பிள்ளையாக என்னிடம் வருவார் ஆசையாவின் ஆத்மா சாந்திக்காக நான் வேண்டுகின்றேன்.

அன்புள்ள பெறாமகன்
சர்வேஸ்வரன் (அப்பு)

## என்றும் என் நினைவில் ஆசை ஐயா

என் ஆசை ஐயா பற்றி எழுத எல்வளவோ இருக்கிறது. எனக்கு ஆசைஐயா நான் சின்ன வயதில் கோயிலுக்கு போனால் உடனே என் கையை பிடித்து பிள்ளை என்னவேனும் என்று கேட்டு இடுப்பில் சொருகி இருக்கும் காசு பையில் காசு எடுத்து தருவார். அது எனக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கும். எனக்கு சுகயீனம் என்ற உடனே அவளைப் போய் பார்த்தனீங்களோடி என்று அக்காவையை அடிக்கடி கேட்டுக் கொண்டு இருப்பார். அப்படி என் ஆசையா சரியான இரக்க குணம் கொண்டவர். என் ஐயா இறந்து விட்டார். எனக்கு ஆசை ஐயா இருக்கிறார் என நினைத்தேன் ஆனால் திடீரென அவரை காலன் கொண்டு போய் விட்டான்.

என் ஆசைஐயா 100 வயது மட்டும் இருப்பார் என நினைத்தேன் என்ன செய்ய பிறந்தவர்கள் எல்லாம் ஒரு நாள் இறப்பது என்பது நியதி தானே என் ஆசைஐயா அவர் தினம் வணங்கும் செம்பரத்தை வைரவப் பெருமானின் காலடியில் துயில் கொள்ள விசவத்தனை வேலனை வேண்டுகின்றேன்.

நன்றி
பெறாமகள்
சி.சகுந்தலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடும்பத்திற்கு மட்டுமல்ல அவர் சார்ந்த சமுதாயத்திற்கே ஆசைய்யா**

இராமசாமி என்ற பெயர் பலருக்கு தெரியாவிட்டாலும் தேங்காய்கார அப்பர் என்றால் எல்லோருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல ஆசைய்யா என்றால் நம்ம ஊரில் எல்லோருக்கும் ஆசைய்யா தான். வெள்ளை சாறம் வெள்ளைச் சேட் தான் அவரது நிரந்தர உடை. ஆடையின் நிறமும் அவரது உள்ளத்தின் நிறமும் ஒன்றுதான் அடுத்தவர்களை வன்சொற்களால் பேசியதை யாரும் அறிந்ததில்லை.

நான் சிறுவனாக இருக்கும் போது எங்கு கண்டாலும் எனது அப்பாவின் வீட்டுப் பெயர் சொல்லி என்ர ரத்தினம் என அழைப்பார். நெருக்கமாக வந்து தோளில் தடவி கதைகள் பேசுவார் அன்புள்ளம் கொண்டவர் அதனால் எல்லோருக்கும் ஆசைய்யாவாக வாழ்ந்தார். எமது கிராமத்தின் வயது கூடிய முதியவராக வாழ்ந்தவர் திடீரென இறைபதம் அடைந்தமை எல்லோருக்கும் வேதனையான செய்திதான் இருந்தாலும் தனது நேர்மையான வியாபாரப் பயணத்தில் தூய பணத்தையும் அனுபவித்து தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாத மனிதன் அடுத்தவனை கெடுத்து வாழ வேண்டும் என சிந்திக்காத ஒரு நேர்மையான வர்த்தகர் ஆசைய்யாவின் முதல் சந்தோஷம் அவரது மூத்த பேரன் பாபு தான் பாபுவின் பொதுப்பணிச் செயற்பாடுகளை கண்டு மகிழ்வடைந்தார். அத்துடன் ஏனைய பேரமக்களின் நல்ல நிலை அவருக்கு பெருமை சேர்த்தது என்றால் மிகையாகாது. ஆசையப்பாவின் ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வம் விசவத்தனை முருகனை வேண்டுவோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

சபா குகதாஸ்

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ளம் கொண்ட ஆசையா !**

ஆசையா இவ்வுலகை விட்டு நீங்கி விட்டார் என்ற செய்தி கேட்டதும் என்னால் நம்ப முடியவில்லை. அதனை இன்று கூட உணர முடியவில்லை. ஊருக்குச் செல்லும் போது ஆசையாக வந்து அணைத்து முத்தமிடுவார் என்ற நம்பிக்கையிலேயே நாட்கள் நகர்கின்றன. கடந்த பத்து வருடங்களாக பணியின் நிமித்தம் வேறு வேறு இடங்களில் தங்கி வார இறுதியில் ஊர் செல்வேன். அங்கு ஆசையா தினமும் எமது வீட்டுக்கு வந்து அணைத்து முத்தமிடுவார். அவர் வராவிட்டால் நான் அவர் வீடு தேடிச் சென்று சந்தித்து விடுவேன். ஆசை ஐயாவின் உறவு என்பது மூன்று தலைமுறைகள் கடந்தும் தொடர்ந்து இருந்தது. இராமாயணக் கதையில் ராமர் லட்சுமணன் பற்றி கேள்விபட்டிருப்போம் ஆனால் அந்த ராமர் லட்சுமணனை நான் நேரில் பார்த்தேன் எனது ஐயா மற்றும் ஆசையா வடிவில் இராமர் இலட்சுமணன் கதை அவர்கள் வாழ்வோடு முடிந்தது. ஆனால் இந்த ஆறுமுகம் இராமசாமி கதை அவர்களின் பரம்பரை பரம்பரையாக தொடரும். ஆசையா தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பரம்பரையாக தொடரும்.

ஆசையா தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தனது அண்ணனின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று பிரித்துப் பார்த்தில்லை. அவரின் பாசம் அது ஆசையாவின் மறைவில் தெரிந்தது. ஆசையா மற்றும் அவரின் மகள்கள் சுற்றி நிற்கும் போது தான் ஐயாவின் உயிர் பிரிந்தது. ஐயாவின் மறைவின் பின் ஆண்டுகள் 17 கடந்த அதே திகதியில் ஆசையா எம்மை விட்டு நீங்கினார். இதன் மூலம் தெரிகிறது அந்த அற்புத மனிதர்களின் பாசம். கோவிட் பரவல் கொடூரத்தால் அவரின் இறுதிக் கிரியைகளில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. ஐயாவின் மரணத்தின் போது வெளிநாட்டிலிருந்து வந்த மாமாக்களிடம் ஆசையா வேண்டிக் கொண்டது தனது இறுதிக் கிரியைக்கு ஒருவராவது வந்து விட வேண்டும் என்று உள்நாட்டில் இருந்து பேரனே செல்ல முடியாமல் தற்போதைய கொவிட் பரவல் உருவாக்கி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பிறைகளைக் கண்ட ஆசையாவிற்கு இனி பிறவி இல்லை என்று பெரியவர்கள் கூறுவார்கள். ஆனாலும் எமது வம்சத்தில் அவதரிக்க வேண்டும்.


ஆசை ஐயாவின் அன்புப் பேரன்
து.சுகந்தலிங்கம்

**அன்பான என் ஐயா !**

இனி நாளை எடு என ரெலிபோனில் கூறினீர்கள். உங்களுடன் கதைத்தால் மனதிற்கு அப்படி ஒரு சந்தோஷம், நிம்மதி, உங்களைப் பார்ப்பதற்காகவே இங்கிருந்து உங்கு வருவேன் இனி என்ன செய்வது. உங்களின் ஒரே ஆசை பாபுவுக்கு வேலை கிடைக்க வேண்டும். அவனுக்கு திருமணம் செய்து வைக்க வேணும் என என்னிடம் கூறுவீர்கள். உங்கள் ஆசை உங்கள் ஆசியுடன் நிறைவேறும். இதை விட வேறு எந்த ஆசையும் உங்களுக்கு இருந்ததில்லை. எவ்வளவு வருத்தம் என்றாலும் நான் கவலைப்படுவேன் என என்னிடம் கூற விடமாட்டீர்கள்.

ஐயகோ இனி எப்ப கதைப்பது என் ஐயாவுடன் உங்களுக்கு சிறு வருத்தம் என்றவுடன் உங்கு வந்துருப்பேன் நாட்டு நிலைமை வர முடியாமல் பண்ணி விட்டதே உங்கள் படங்களைப் பார்த்து ஆறுதல் அடைவதனைத் தவிர வேறு வழி இல்லை. என் ஐயாவும் அம்மாவும் சேர்ந்து என்னை ஆசி வழங்கி வாழ்த்திக் கொண்டே இருப்பீர்கள்.

அன்புமகள்
ஜெயா (சுவிஸ்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னத உழைப்புக்காரர் !

கூடார வண்டிலும்
குவியல் தோன்றும்
கண்முன்னே வந்து போகும்
உம் வண்ணமும்
காண்கையிலே
காலத்தின் கணக்கில்
காலமாகிப் போனாலும்
காலம் காலமாய்
நினைவில் நிலைத்திடும்
புகழுடம்புக்காரர் நீங்களே

வியாபாரத்தில் இவர்
விலாசம்
வாடிக்கையாளர்களிடம்
விஸ்வாசம்
நிர்ணயிப்பு விலைகளில்லை
அவரவர் நிலைபார்த்து
நியாயமாய் நடந்திடும்
தாராள மனசுக்காரர்

ஓயாத உழைப்பிலும்
உலகம் தொட்டும்
ஒரு தலைக்கனமில்லாத
தன்னடக்கக்காரர்
உழைப்புக்கு வயதில்லையென
உரக்கச் சொன்ன
உன்னத உழைப்புகாரர்

ஓய்வெடுக்கும் காலம்
அவரை நெருங்க
ஓயாத கவலையில்
உறவுகள் துடிக்க
ஊருக்கே அப்பரான
உழைப்பாளி ஊர்வலம்
ஊர்தியில் நகர்ந்திட
ஊரே அழுதது
உன்னதத்தை இழந்து
அன்னாரின் ஆத்மா
சாந்திகொள்ள
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி

பா.தேவகஜன் (சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பரம்மான்**

நல்ல மனிதர் ஆயிரம் பார்த்தாச்சு
அப்பரம்மான் நல்ல மனிதர்
இரத்தினம் முதலாளி ஒருபக்கம் சாக்கை பிடிக்க
மறுபக்கம் நான் பிடிக்க அப்பரம்மான்
தேங்காய் எண்ணிப்போடுவார்

சின்னச்சிரிப்போட மெல்லப் பேசுவார்
சின்னவனென்ற பேதமின்றி
சேர்ந்து கதைக்கும் நல்ல மனிதர்
அன்று தொடங்கிய நட்பு
இன்று வரை தொடர்ந்தது...
2015 ஊர் சென்ற வேளை சங்கானையில்
அதே கடை, அதே ஸ்ரூல், அதே இருப்பு
அதிசயித்துப் போனேன்
எங்கம்மா வயது அன்பிலும் பண்பிலும்
எங்கம்மா போலே இனிமையான மனிதர்
ஒரு சபைக்கு சாப்பிட போயிருந்தேன்
கையைப்பிடித்து இழுத்தார் எப்பட வந்தனியென்று
முந்தநாள் வரும் போது உங்களைப் பார்த்தேன்
சந்தோசப்பட்டேன் என்று சொன்னேன்.

அடுத்தமுறை நீ வரும் போது அதில் இருப்பேனென்றார்.
நான் போகப்பிந்தி விட்டது. அப்பரம்மான் முருகன்
வீட்டில் குடியேறிவிட்டார்
பள்ளித்தோழி தேவிக்கும் அவர் தம் உறவுகட்கும்
ஆறுதலையும் அன்பையும் தெரிவித்து
அப்பரம்மான் விசவத்தனை முருகன்
திருவடி நிழலில் நிம்மதியாய் நீள்துயில்
கொள்ள பிரார்த்திக்கிறேன்.

வெ.வேலழகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது பாசமிகு ஆசை அம்மான் – இனி எப்போது காண்பேனோ.**

ஆசையம்மானை நான் முதல் முதல் சந்தித்தது 2003 ஆம் ஆண்டில் தான். ஆனால் அம்மாவுக்கு வந்த கடிதப் போக்குவரத்தாலும் அம்மா எந்த.நேரமும் எங்களது ஊரைப் பற்றியும் தம் சகோதரங்களைப்பற்றியும்கதைப்பது எங்களுக்கு எங்களது சொந்தங்களைப்பற்றிய ஆவலையும் அக்கறையையும் வலுவாக்கியது. ஆசையம்மானைப்பற்றி சொல்லும்போது. அப்பர் ஒன்றிற்கும் ஆசைப்படாது. நல்ல குணம். சாது, எல்லோருக்கும் நல்ல பிள்ளை என்று புகழாரம் சூட்டுவா. அதே போல இருந்தார் ஆசையம்மான் - அம்மா மிகைப்படுத்தி சொல்லவில்லை. ஆசையம்மான் சிங்கப்பூருக்கு வந்து எங்களுடன் இருந்த நாட்களை மறக்க முடியாது. அவரை சிங்கப்பூருக்கு வரவழைத்து ஊர் சுற்றிக்காட்டவேண்டும் என்பது அம்மாவின் நெடு நாள் ஆசை, அந்த ஆசையை அவ போனபிறகுதான் எங்களால் நிறைவேற்ற முடிந்தது. அதுக்கு முன்னர் அம்மானுக்கும் அந்த விருப்பம் இல்லை அதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை.கொரோனாவின் தாக்கம் இந்த உலகத்திற்கு தெரியவருவதற்கு முன்னதாக நானும் எனது அண்ணனும் ஜனவரி 2020-ல் எங்களது அம்மான்மார்களையும் (ஆசையம்மான் சின்னம்மான்) மற்ற எல்லா உறவினர்களையும் சந்தித்து அவர்களுடன் சிறிது காலம் தங்கியிருக்க ஏற்பாடு செய்திருந்தோம். கொரோனாவால் பயணத்தடை ஏற்பட்டு. இப்போது இருவருமே இல்லாமல் போய்விட்டார்கள். மகள் எனது பேத்தியை அவளின் பூட்டன்மார்களுக்கு அறிமுகப்படுத்தியதில் பேரானந்தம் அடைகிறேன். இனிய நினைவுகளுடன் என் அன்பும் பாசமும் நிறைந்த எனது இரண்டு அம்மான்மார்களையும் நினைவு கூறுகிறேன். அவர்களது ஆத்மா சாந்தியடையவேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

மருமக்கள் சாந்தா தேவி + மோகனரூபன் மற்றும் குடும்பத்தினர்
Missing my Dearest Aasaiamman and Sinnamman very dearly.
May their good souls rest in peace. Ever loving niece & nephew
Santha Devi & Moganaruban and our families.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் உயர்திரு அப்பாப்பிள்ளை இராமசாமி (அப்பர்) அவர்களின் நினைவாக..**

அப்பாப்பிள்ளை இராமசாமி என்ற அரும்பெரும் மானிடன் பண்ணாக மண்ணிலே பிறந்து தமிழ்த்தொண்டும் தெய்வத்தொண்டுத் தவறாது கடைபிடித்தொழுகிய ஒரு பெருந்தகையாவார். நெற்றியில் வீபூதிக் குறியும் சந்தனப்பொட்டும் அவரது அடையாளமாகும். விசவத்தனை முருகனின் தொண்டுகளானாலென்ன வைரவர் பொங்கல் விழாவானாலென்ன இந்தப் பெரியாரின் பங்களிப்பு கட்டாயம் இருக்கும் தனது தந்தையின் வழியொட்டி தேங்காய் வியாபாரம் என்ற மங்களகரமான தொழிலை வாழ்நாள் முழுவதும் செய்தவர் சங்கானைக் கோவில்பற்று முழுவதிலுமுள்ள ஆலய நிர்வாகமோ கடைக்காரர்களோ குடும்பஸ்தர்களோ உங்களையும் உங்கள் தேங்காய் வண்டியையும் ஆவலுடன் வரவேற்பர். வருடப்பிறப்பு வந்தால் "போர்த்தேங்காய்" அடிக்கும் இளைஞர்கள் முதலிலேயே சொல்லி தான் நம்பி இருப்பார்கள். நேர்த்திக்கடனுக்கு மூடைக்கணக்கான தேங்காய் இறக்கிவிக்கும் பக்தர்களும் உங்கள் வரவை எதிர்பார்ப்பர்.

நேர்மையான தொழில்மூலம் தங்கள் குடும்பத்தையும் பெற்றோர், சகோதர சகோதரிகளையும் பேரக்குஞ்சுகளையும் பேணிக் காத்தீர்கள். உங்களைப் போலவே உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருடனும் அன்பு பாசத்துடன் பழகி இவர்கள் "அப்பரின் வாரிசுகள்" என்ற சிறப்புப் பெயருடன் வாழ்கின்றனர். தங்கள் அருமை சகோதரர் உயர்திரு ஆறுமுகம் பண்டிதர் அவர்கள் எனக்கு குருவாக அமைந்தவர். அவர் தந்த தமிழ் அறிவு கொண்டு தங்களுக்கும் சில வரிகளை எழுதியுள்ளேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

வள்ளியம்மை சுப்பிரமணியம்
சத்தியமனை
சுழிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான ஆயைய்யாவே

செல்லம்மா எனும் அன்னை மடியில்
என் தந்தைக்கு அண்ணனாக
அவதரித்த அமுத சுரபி நீங்கள்
எங்களை விட்டு போனதெங்கே?
அன்று முதல் இன்று வரை
என்றும் உங்கள் முகம் வாடியதில்லை
உங்களோடு பேசியவர் உள்ளம் என்றும் துன்முகத்தை
நாடியதில்லை
உங்களை விரும்பாதோர் யாருமில்லை என்னுடைய
ஆசைய்யாவை
வெறுப்போர் என்று எவருமில்லை
குறையுண்டோ நான் சொல்ல
இனி எனக்காக ஆதரவு தர யாருமில்லை
கண்களில் நீர் பொழிய
கைகள் நடுநடுங்க
இலக்கியம் தடுமாற
இலக்கணம் தமிழ் மாற
எப்படி கவிதை எழுதமுடியும்?
உங்கள் புகழ் எப்படி பாட முடியும்?

உங்கள் அன்பான
பெறாமகள் றூபி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசையம்மான் இனி எப்போது காண்போம் இனி?**

எங்கள் அன்பு உள்ளம் கொண்ட ஆசையம்மான் அப்பர் அவர்களின் திடீர் மறைவு எங்களையெல்லாம் ஆழ்ந்த துயரில் ஆழ்த்திவிட்டது. நாங்கள் பண்ணாகத்திற்கு வரும் வேளைகளில் அன்னாரிடம் பழகிய நாட்களை எங்களால் மறக்க இயலாது.

நல்ல அன்பானவர். உறவினரென்று நல்ல அக்கறையுடன் எங்கள் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தார். சூரியன் உதிக்கின்றதோ இல்லையோ, விடியற்காலையில் தான் புதிதாகக் கறந்த பசுப்பாலை எங்களுக்கும் கொண்டு வந்து தருவார். எங்களுடைய ஆசையம்மான் இளைப்பாற வேண்டிய இந்த நல்ல வயதிலும் ஓய்வாக இல்லாமல் ஒரு நல்ல வாலிப வயதினர்கள் போல் ஓடி ஆடி வேலை செய்தவர். என்றும் இப்போதுள்ள இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்துள்ளார். அன்னாரின் திடீர் மறைவால் வாடி நிற்கும் பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

கண்ணீர் அஞ்சலியுடன்
மருமகன்செல்வராஜா
மகள் உறவில் தேவி சிங்கப்பூர்

**எங்களின் பாசமான ஆசைஐயாவே !**

உங்களின் பிரிவு எங்களிற்கு எல்லாம் மீளாத்துயர் நீங்கள் வாழும்வரை உங்கள் கையால் உழைத்து வாழ்ந்தீர்களே ! மற்றவர்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாய் அதாவது "உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே" என்று வாழ்ந்தீர்களே உங்களின் முயற்சியும் தன்னம்பிக்கையும் உங்களை உயரவைத்தது. நீங்கள் காட்டிய பாதையில் செல்லத்தான் எனக்கும் ஆசை. உங்களை என் உயிர் உள்ளவரை மறக்க மாட்டேன். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பெறாமகன் நடேஸ் (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ர ஐயா !!!**

ஒருவனுக்கு சிறந்த தந்தை கிடைச்சால் அவன விட அதிஷ்டசாலி உலகத்தில் இல்லை. அந்த வகையில் நான் மிகவும் கொடுத்து வைத்தவன். என்றே சொல்லுவேன். எனக்கு நீங்க தந்தையா கிடைச்சது நான் செஞ்ச அதிஷ்டமே ஐயா. எனக்கு சின்ன வயசிலே இருட்டெண்டால் பயம் அதனால நான் படிக்கும் வரைக்கும் முழிச்சிருந்த காவல் தெய்வம் நீங்கள். நாங்க கேட்டதெல்லாம் வாங்கித் தருவீங்கள். ஒரு நாளும் இல்லையென்று சொல்ல மாட்டீங்க

1995ம் ஆண்டு இடம்பெயர்வில் நானும் எனது கணவரின் குடும்பமும் நாகர் கோயிலில் இருந்தனாங்கள். நீங்கள் சரசாலையில் இருந்ததனீங்கள் என்னைக் காண வேண்டும் என்பதற்காக கிழமையில் ஒரு தடவையேனும் பல்வேறு இன்னல்களையும் தாண்டி சைக்கிளில் வாறனிங்கள். ஐயா அதுமட்டுமல்ல நான் சங்கானையில் இருக்கேக்க ஒவ்வொரு நாளும் எங்கள் வீட்ட ஏதாவது கொண்டு வருவீங்கள். எப்படி ஐயா உங்களை நான் மறப்பேன்.

எனக்கு வருத்தம் என்டால் உடன துடிப்பீங்கள் என்ன செய்யுது ஆஸ்பத்திரிக்கு போனியோ அங்க என்ன சொன்னவங்கள் மருந்து தந்தவங்களோ எண்டெல்லாம் விசாரிப்பீங்க. ஆஸ்பத்திரிக்கு போய் வர நேரஞ்செண்டால் "எங்கடி அம்மாவ காணேல ரெலிபோன் பண்ணிப்பாரு" எண்டு என்ர பிள்ளையளிட்ட சொல்லுவீங்களே ஐயா இனியார் என்ன இப்படித் தேடுவினம் எனக்கு வருத்தம் எண்டால் நீங்களே போட்டு சாப்பிடுவீங்கள் என்ர பிள்ளையளுக்கு ஏதாவது தேவையெண்டால் உடனே நீங்கள் பண்ணிக் கொடுப்பிங்களே ஐயா உங்கட பேரப்பிள்ளையள் எல்லாரையும் பத்தியும் விசாரிப்பிங்களே ஐயா இனியார் எங்கள விசாரிக்க.

கடைசியா டெங்குக் காய்ச்சல் வந்தபோது ஆஸ்பத்திரியிலே "என்னோட நீ இரு" குழந்தை மாதிரி சொன்னீங்களே ஐயா எல்லாம் இப்பவே கண்முன்னே நிக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக கடைக்குப் போகாதீங்கள் ஐயா என்று சொன்னால் சீ போ இண்டைக்குப் போகணும் எண்டு சொன்னிங்களே ஐயா குழந்தமாதிரி அது வேணும் இது வேணும் என்று சொல்லி வாங்கிச் சாப்பிட்டீங்களே ஐயா கடைசியா என்ர கையால் தேத்தண்ணி வாங்கி குடிச்சீங்களே ஐயா. ஐயா கடைசிக் காலங்களில் எனக்கு நீங்கள் குழந்தைய இருந்தீங்கள். குழந்தையாகவே போன நீங்கள் மீண்டும் என்ர வீட்ட குழந்தையாகவே வாங்கள்.

இப்படிக்கு
உங்கள் பிரிவால் வாடும்
உங்கள் அன்பு மகள்
கு.லோகேஸ்வரி தேவி

**ஆசையான ஆசையா !**

நீங்கள் எனது ஐயாவின் தம்பியாக இருந்தாலும் நீங்களும் எனக்கு ஐயா தான். எமது வீட்டிற்கு ஒவ்வொருநாளும் வருவீர்கள். என்னை கடைக்கு கூட்டிப் போக வா என்று கேட்பீர்கள். என்றும் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். கடையிலும் எல்லோரிடமும் அன்பாகக் கதைப்பீர்கள். சண்டை சச்சரவு என்றால் உங்களுக்கு பிடிக்காது. அந்த இடத்தில் நிற்க மாட்டீர்கள். நீங்கள் திடீரென்று சுகவீனமுற்று மறைந்தது எங்களால் தாங்க முடியவில்லை.

நீங்கள் இப் பூவுலகில் நிறைந்த வாழ்வு வாழ்ந்தவர். அயலில் இருக்கும் செம்பரத்தம் வைரவரைத் தான் கும்பிடும் நீங்கள் அவரின் பாதம் சென்று இருப்பீர்கள் என நினைக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

பெறாமகள்
செ.சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னோட ராம் !**

சில சமயங்களில் தெய்வங்கள் மானிடர்களாய் பிறந்து வந்து வாழ்வதுண்டாம். என்னோட ராமும் அப்படி தான் உண்மையாகவே ஐயா பற்றி நினைக்கும் போது தோன்றுகின்ற விஷயமும் அதுதான். உங்களைப் பற்றி எழுதணும் எண்டா நான் எங்க தொடங்கி எங்க முடிக்குறது ஐயா ! எனக்கு எல்லாமாகவும் இருந்து எனக்கு அம்மா, அப்பா, Friend, பேரன் சில சமயம் சின்னப்பிள்ளைத் தனமாக அடம்பிடிச்சு ஒரு குழந்தை என எல்லா உறவும் நீங்க தானே ஐயா, கேட்டு ஒருநாளும் இல்லை எண்டு சொன்னது இல்லை கேட்டால் கேட்டதுக்கு அதிகமா மட்டும் தான் எப்பவும் கிடைக்கும். கோவமா ஒரு வார்த்தை சொன்னதும் இல்லை. ஆகபட்சமான மிரட்டல் "அடி போடி பேச்சி" என்றது தான். ஆதுவும் சிரிச்சுக்கொண்டே தான். என்னோட அன்புக்கோயில் ஐயா நீங்கள். என்ன பிறவிப் பயன் செய்தேனோ தெரியாது உங்களுக்குப் பேத்தியாக பிறக்க. எப்பவுமே ஒரு கர்வம் ஐயா "என்னோட தாத்தா மாதிரி யாருக்கும் கிடைக்க மாட்டாங்க எண்டு" அது இப்பவும் எப்பவும் இருக்கும் அந்தக் கர்வம் என்னோட தெய்வம்,

School படிக்கிற காலத்தில என்னோட Alarm ஐயா தான். என்னோட அம்மாக்கு கூட தெரியாது என்ன Time நான் எழும்புற எண்டு. ஆனால் ஐயாக்கு தெரியும். எப்பவாச்சும் பஞ்சி எண்டு காலைல எழும்பாம விட்டால் ஏன் இண்டைக்கு படிக்கலையா எழும்பு எண்டு நான் வழமையா எழும்புற Timeமே எழுப்பிவிட்டுவிங்க ஐயா. அது மட்டுமா School Books வாங்குறதுல இருந்து ரீயூசன் Fees வரை ஏன் University படிக்க வைச்சது வரை எல்லாமே நீங்க தானே ஐயா. நானும் படிச்சு முடிச்சு உழைச்சு முதல் மாச சம்பளம் தரணும் Grauduation க்கு கூட்டி போய் அந்த தொப்பியும் கோட்டும் உங்களுக்கு போட்டு அழகு பார்க்கணும் எண்டு இருந்தால் எல்லா கனவையும் உடைச்சிட்டு நீங்கள் மட்டும் எல்லாக் கடமையும் ஏன் எல்லாக் கடன்களையும் தந்துட்டு எங்களிட்ட இருந்து ஒண்டுமே வாங்காமல் போயிட்டீங்கள். இது எந்த வகையில் நியாயம்? எல்லாரோட வீட்டையும் பேரப்பிள்ளைகளும், பிள்ளைகளும் தான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா, பாட்டியைப் பார்த்துப்பாங்க. ஆனா எங்க வீட்டில கடைசி நாள் வரைக்கும் நீங்கள் தானே எங்களைப் பார்த்திட்டு வந்தீங்க. என்னோட தங்கமே. முதல் நாள் கேக்க அடுத்த நாள் Motor Bike வாங்கித் தந்தீங்கள். ஆனால் நான் ஒரு சட்டை வாங்கித் தந்தால் சீக் எனக்கு என்னத்துக்கடி எண்டு சிரிச்சுக்கொண்டே கடிந்து கொள்வீங்க. ஏன் ஐயா புத்தனை விட ஒரு படி உயர்வான துறவியா இருந்தீங்க University ல இருந்து வீட்டுக்கு வாறன் எண்டா அந்த நாள் நான் வரும் மட்டும் பெரியம்மா வீட்ட வழமையா போறத விட்டிட்டு எனக்காக நிப்பிங்கள். University போறது எண்டால் என்னை வழியனுப்பிட்டு தான் உங்கட வைரவகோயிலுக்கே போவிங்கள்.

இப்படி பாத்து பாத்து பாசம் என் அம்மா கூட எனக்கு காட்டினது இல்ல ஐயா! எல்லாரும் உங்கள அப்பர், அப்பாப்பிள்ளை எண்டு கூப்பிட்டு தான் தெரியும். ஆனால் ராம் எண்டு தான் நான் உங்கள கூப்பிடுவன் எண்டு சொல்ல, கூப்பிடன். "ராமர்" கடவுள்ட பெயர், எண்டு சொல்லி சிரிச்சீங்கள். சிலநேரம் வாங்க ஐயா பலம் பார்ப்பம் எண்டா சின்னப்பிள்ளை போல வருவீங்கள். யார் பலசாலி எண்டு "பல்லும் இல்ல கிழவன் என்டு சொன்னால், யார் சொன்ன எனக்கு பல் இல்ல எண்டு, என என்னோட சண்டைக்கும் வருவீங்கள் சிரிச்சுக்கொண்டு. தலைமுடியை டிசைன் டிசைனா கட்டி சின்னப்பிள்ளைத் தனமாக நான் விளையாடும் போது கூட நீங்களும் சேர்ந்து சிரிப்பீங்கள். இன்னும் எத்தின எத்தின நினைவுகள் ஐயா ! உங்களோட நெருப்பில சுட்டாலும் மறக்கமாட்டன் ஐயா. இதவிட இனிமையான அழகான ஆழமான ஒரு பாசம் இனி கிடைக்குமா எண்டு கூட தெரியாது ஐயா. I Love You Ram.

எப்பவுமே நீங்கள் சொல்லுற போல் படுக்கையில் கிடக்காமல் நான் சாகணும் எண்டு சொல்லுற போல எங்கள் எல்லாரையும் விட்டிட்டு போயிட்டிங்கள். படுக்கையாக்கி இறந்து போகிற ஒரு நிலைமை வந்திருந்தா நீங்கள் எவ்வளவு கவலைப்பட்டிருப்பீங்கள் என்றது தான் எங்கட ஆறுதலும். சொர்க்கத்தில் போய் சந்தோசமா இருங்க. இன்னொரு பிறவி இருக்கு எண்டால் எங்க வீட்டிலே வந்து எங்களோடவே வந்து வாழுங்க ஐயா. நீங்க எங்கட ஐயா மட்டும் எல்லோ

I Love You ஐயா!

இப்படிக்கு பேத்தி கு. அபிராமி

**எங்கள் அன்பான ஆசை ஐயா !**

எங்கள் ஐயாவின் தம்பிமார்களின் ஆசை ஐயா, குஞ்சையா இருவரும் எங்கள்மேல் அன்பும் பாசமும் கொண்டவர்கள். நாம் சின்னப்பிள்ளைகளாக இருக்கும் போது எங்கள் ஆசை ஐயா நாம் சிற்றுண்டிகள் வாங்கிச் சாப்பிட காசு தருவார். அண்ணனின் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாக நேசித்து அன்பு செலுத்துபவர். எமது வீட்டிற்கு தனது மகள் தவம், வரும்போது எம் வீட்டிற்கும் வந்து எம்மை சுகநலம் விசாரிப்பார்.

அவர் தனது வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அவருக்கு தனது சங்கானைக் கடைக்கு போனால் தான் நிம்மதி. ஊரடங்கு காலத்திலும் போகவேணும் என்று கதைப்பார். நாம் சொல்லுவது இப்போதைக்கு போகக்கூடாது என்று. 96 வயதிலும் உழைக்க வேண்டும் என்று வைராக்கியம் கொண்டவர்.

அவர் அதிகாலை எழும்பி தனது காலைக்கடன்களைச் செய்து விட்டு செம்பர்தம் வைரவருக்குப் பூப் போட்டு மணி அடித்துக் கும்பிடுவார். அவர் அடிக்கும் மணிச்சத்தத்தில் நாமும் பைரவரை வீட்டிலிருந்து கும்பிடுவோம். எங்கள் ஆசை ஐயா என்னும் நான்கு வருடம் வாழ்ந்து நூறாவது பிறந்தநாள் கொண்டாடுவார் என்று நினைத்தோம். காலன் அதற்கு இடம்கொடுக்கவில்லை. நாம் கொரோனாவில் பீடிக்கப்பட்டிருந்ததால் எங்கள் ஆசை ஐயாவின் முகத்தைக்கூடப் பார்க்க முடியவில்லை என்று நினைத்துக் கவலைப்படுகின்றேன். எங்கள் ஆசை ஐயா பாயில் படுக்காமல் போய்விட்டார். அவர் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வம் விசவத்தனை முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

ஆசை ஐயாவின் பிள்ளைகள் தவம், தேவி, ஜெயா என்போருக்கு ஆறுதல் கூறுவதைத்தவிர நாம் என்ன செய்வது. பிறப்புண்டேல் இறப்பும் உண்டு. இது தான் உலக நியதி !

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

என்றும் ஆசை ஐயாவின்
அன்புப் பெறாமகள்
(ராணி) வசந்தமலர் துரைலிங்கம்
பண்ணாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் ஆசைய்யா !

ஆசைய்யா அன்பும், அறனும், ஒழுக்கமும் ,கடின உழைப்பும் நிறைந்த ஒரு மனிதர். இந்த அற்புதமான மனிதரை எனது பேரன் என்று சொல்லிக்கொள்வதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். அறத்தின் வழியே வாழ்க்கை பயணிக்க வேண்டும், மறந்தும் பிறன்கேடு சூழக்கூடாது என்பது தமிழர்களின் சங்கமரபு, அதுவே தமிழர்களின் பண்பாட்டு அறமாகவும் விளங்கி நிற்கிறது. 10000 வருடங்களாக தமிழர்கள் தமிழ் சங்கம் வளர்த்து தமிழ் என்ற மொழியையும், பண்பாட்டையும், வீரத்தையும் வளர்த்தார்கள் கால நீரோட்டத்தில் பல வீழ்ச்சியையும் எழுச்சியையும் கடந்து தமிழர்களின் மரபுகள் தொடர்கின்றன. தமிழர்களின் மொழிப்பற்று, பண்பாட்டு அறம், வீரம் ஆகியவை காலத்தால் அழியாத மரபணுக்களாக தமிழர்கள் மத்தியில் என்றும் வீற்றிருக்கும் என்பதை அரிதான சில மனிதர்களின் வாழ்க்கைமுறையிலிருந்து, இன்றும் நாம் கற்றுக்கொள்ளலாம். எங்கள் "ஆசைய்யாவும்" தமிழர்களின் பண்பாட்டு அறத்துக்கு ஏற்றாற்போல வாழ்ந்தார் என்பதே அவருக்கான சிறப்பு. வாழ்ந்தால் இவரைப்போல வாழவேண்டும் என்ற உதாரண கர்த்தாவாக இவர் விளங்கி நிற்கிறார். தன் வாழ்நாள் முழுவதும் அற நெறியுடன் தனக்கென்று வகுத்த ஒழுக்க கொள்கைகளை தவறாமல் பின்பற்றி, இறுதி வரை ஓயாது உழைக்க வேண்டும் என்ற மன திடகாத்திரத்துடன் வாழ்வது என்பது பல ஆயிரம் நபர்களில் ஒருவராலேயே முடியும். அந்த ஆயிரத்தில் ஒருவரே எங்கள் ஆசைய்யா.

அப்பாப்பிள்ளை வம்சத்தில் இவர் ஒரு அன்பின் சுப வடிவமாகவும், எளிமையின் அளவுகோலாகவும் அனைவரது மனதிலும் வீற்றிருக்கிறார். எனது பாட்டன் அப்பாப்பிள்ளை அவர் தனது முற்பிறவியில் நல்லது செய்திருக்கவேண்டும், ஆதலால் தான் அவரது பிள்ளைகள் அனைவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த பாசத்துடனும், புரிதலுடனும், கல்வி அறம், பண்பாட்டு அறம், மற்றும் புகழ் அறத்துடன் சிறப்பாக வாழ்ந்தார்கள் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பேரன் பண்டிதர் ஐயா அவர்கள் (இவரது மூத்த சகோதரர் ஆறுமுகம் ஆவார்) தமிழில் பாண்டித்தியம் பெற்று தமிழ் மொழிக்கான (தனது பணியை திறன்பட இறுதி வரை அயராது மேற்கொண்டு வாழ்ந்தார் என்பது கல்வி அறத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி நிற்கிறது. எனது இன்னொரு பேரனான "குஞ்சைய்யா" (ஆசைய்யாவின் இளைய சகோதரனாவார்) இளகிய மனம் கொண்டவர், மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மளிகைக்கடையை திறன்பட நடத்தி, உறவினர் பிள்ளைகள் அனைவர்களுக்கும் பாரி வள்ளல் போல உணவு பண்டங்களை இலவசமாக அள்ளி கொடுத்து வளர்த்தெடுத்தார் என்றால் அவர் போல வள்ளல் எம் வம்சத்தில் இருந்ததில்லை, இனிதேனும் இருப்பார்களாக என்பதும் கேள்விக்குறி. அந்த அள்ளி கொடுக்கிற மனசு இப்போது யாருக்கும் வருவதில்லை.

"ஆசைய்யா" தேங்காய் வியாபாரம் செய்து அதில் வரும் வருமானங்களை அனைவருக்கும் கொடுத்தார், தனக்கென்று ஒன்றையும் சேமித்ததில்லை. திருவிழாக்காலங்களிலே தங்களுக்கு காசுகளை தந்து விரும்பினதை போய் வாங்குங்கள் என்று பாசத்துடன் அனுப்பி வைப்பார் என்று என் தாயும், தந்தையும் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். இவ்வாறான மனிதர்கள்ஒரே குடும்பத்தில் சகோதரர்களாக பிறப்பது என்பது அரிது .நாங்கள் புண்ணியம் செய்திருக்கவேண்டும் ஐயா, ஆசைய்யா,குஞ்சைய்யா போன்ற நல்ல உள்ளம் கொண்டவர்களின் வாரிசுகளாக பிறந்ததற்கு. ஆசைய்யா பற்றி சிறுவயதில் எனது அம்மா ,மற்றும் அன்பான உறவுகள் கூடியிருந்து அவரைப்பற்றி பெருமையாக கதைக்கும் பொழுதுநானும் அதை விரும்பி ஆர்வமாக செவிமடுப்பதுண்டு.

ஆசைய்யா என்றால் அனைவருக்கும் அதீத பிரியம். நான் சிறுவனாக இருக்கும் பொழுது ஆசைய்யாவை பார்த்தாலே ஒரு ஈர்ப்பு மற்றும் மரியாதை ஏற்படும். குஞ்சைய்யாவின் கடையை தாண்டி போனால், குஞ்சைய்யா எங்களை கூப்பிட்டு தீனி பண்டங்களை அள்ளி கையில் தந்து சாப்பிடும் படி கூறுவார் .அதே போல ஆசைய்யா எங்களை கண்டால் அரவணைத்து தேங்காய்கள் தந்து,சாப்பிட ஏதேனும் தந்து எங்களை மகிழ்விப்பார். பண்டிதர் ஐயாவிடம் சென்றால் பாடப்புத்தகத்தில் படித்ததை வினாவுவார் ,மற்றும் தேவாரங்களை கற்றுத்தருவார். அவரை கண்டால் நாங்கள் சிலர் ஒதுக்கியே இருப்பதுண்டு. எனது அண்ணர் மட்டும் அவரிடம் பிரியமுடன் சென்று கேட்டு படிப்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எங்களுக்கு ஆசைய்யா,குஞ்சைய்யா என்றால் தான் அதிக விருப்பம். ஒரு பெரும் கூட்டு குடும்பமாக வாழ்ந்த அந்த காலங்கள் மறக்க முடியாதவை உறவு முறைகளை கற்று தந்த காலம் அவை. மாமா மார்கள் மாமி மார்கள், சித்தப்பாமார்கள்,சித்திமார்கள் ,மச்சாள்மார்கள், அத்தான்மார்கள் என்று அனைவரின் அன்பையும், பாசத்தையும் உணர்ந்த காலங்கள் அவை. ஆசைய்யாவின் சில கொள்கை பிடிப்பான வாழ்க்கை முறைகள் என்னை இளம் பராயத்தில் நிறையவே சிந்திக்க வைத்ததுண்டு. ஆசைய்யா வீட்டை விட்டு வெளியே சென்றால் பிறர் வீட்டில் தேனீர் அருந்தவே மாட்டார் என்றும், காலையில் 5 மணிக்கு எழுந்து குளித்த பின், வைரவர் கோவில் சென்று விளக்கேற்றி, கோவில் மணி அடித்த பின்பு தான் தனது காலை உணவை எடுத்துக்கொள்வார் என்ற கதைகளை அந்த இளம் வயதில் கேட்டபொழுது, என் மனதில் அவர் வித்தியாசமான மனிதர் போலவே தென்பட்டார். எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து ஆசைய்யா மிகவும் எளிமையான மனிதராகவே வாழ்ந்து வந்தார்.

8வயதிலே நான் எனது குடும்பத்தாருடன் புலம் பெயர்ந்ததால் அவருடன் பல வருடங்கள் பழகும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை. ஆனாலும் அவரின் நினைவலைகள் எப்போதும் என் மனதில் ஆழமாக பதிந்திருந்தது . எனது பேரன் பண்டிதர் ஐயா தமிழ் மொழிக்காகவே தன் வாழ்நாளை செலவிட்டார் என்பதை கூறி அவரின் பெரும் விருட்சத்தில் குளிர்காய நான் என்றுமே விரும்பினதில்லை. நானும் எனது மக்களுக்காகவும் ,சமூகத்தின் எதிர்கால நலனுக்காகவும் பாடுபட வேண்டும், அதையே எனது வாழ்நாள் இலட்சியமாக வகுத்து கொண்டு செயற்பட்ட காலங்களில் இருந்து நான் நிறையவே கற்றுக்கொண்டேன். எப்படியும் வாழலாம் ,ஆனால் இப்படி தான் வாழவேண்டும் என்ற கொள்கைப்பிடிப்போடு நான் வாழ்வதற்கு நிறைய உன்னதமான மனிதர்கள் வழிகாட்டிகளாக திகழ்திருக்கிறார்கள். அதில் ஆசைய்யாவின் கொள்கை பிடிப்பான வாழ்க்கைமுறையும், கடின உழைப்பும் எனக்கு சிறந்த வழிகாட்டுதலாக விளங்கி நிற்கிறது. 2003ஆம் ஆண்டு நான் ஊருக்கு வந்திருந்த பொழுது ஆசைய்யாவை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னை ஆரத்தழுவி, தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்தோம்பல் செய்ததை எவ்வாறு மறப்பது .எல்லோரையும் சுகம் விசாரித்து, என்னையும் பத்திரமாக வெளிநாடு திரும்பும் படி சொன்ன அந்த அன்பு அறிவுரைகள் இன்னும் என் நினைவில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் 2005இல் மீண்டும் ஊருக்கு வந்திருந்த பொழுது அவரை சந்தித்து பழக வாய்ப்பு கிடைத்தது. ஊருக்கு வர முடியாமல் போன காலங்களில் எல்லாம் அவர் தன்னுடைய சங்கானைக் கடையில் இருந்து தேங்காய் வியாபாரம் செய்வதை தூரத்தில் இருந்து அவதானித்து ரசித்தது உண்டு. இறுதியாக 2012 இல் ஆசைய்யா சிங்கப்பூருக்கு வந்திருந்தபோது, அவரை என் இல்லத்திற்கு அழைத்து சென்று விருந்தோம்பல் கொடுக்கும் பொழுது அவர் கடைபிடித்த அந்த எளிமையான உணவு பழக்கவழக்கத்தை பார்த்து மெய்சிலிர்த்தேன். பின்பு ஆசைய்யாவிடம் அவருக்கு என்னவிருப்பம் , எதனை வாங்கி தருவது என்று வினவியபோது, தனக்கு ஒன்றும் தேவையில்லை தன் பேரப்பிள்ளைகளுக்கு ஏதேனும். வாங்க முடியும் என்றால் வாங்கும் படி சொன்ன பொழுது, அவர் தனக்காக ஒரு பொழுதும் வாழ்ந்ததில்லை, தன் பிள்ளைகளுக்காகவும் ,பேரப்பிள்ளைகளுக்காகவும் தான் வாழ்ந்தார் என்பதை உணர்ந்தேன். தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்கின்றவர்கள் அனைவரும் போற்றப்படவேண்டியவர்களே ஆசைய்யாவும் போற்றப்பட வேண்டியவரே. 65 வயதினை கடந்து விட்டாலே ஓய்வூதியம் பெற்றுவிடுவார்கள், ஆனால் எங்கள் ஆசைய்யா 95 வயதை எட்டியும் தன் தேங்காய் வியாபாரத்தை முன்னெடுத்தார் என்பதை நினைத்து அவரிடமிருந்து இளையவர்கள் அனைவரும் கற்றுக்கொள்ளவேண்டிய சிறந்த வாழ்க்கை பாடங்கள் நிறையவே உள்ளன.

நல்லவர்களாக வாழவேண்டும் தான், அதை விட வல்லவர்களாக வாழ்வதே சிறந்தது. அதுவே சுய முன்னேற்றத்தையும், சமூக முன்னேற்றதையும் ஏற்படுத்தக்கூடியவை என்பதை அனைவரும் புரியவேண்டும். வீரப்பேச்சுகளிலும், உணர்வு பொங்கி கவிதை எழுதுவதாலும் ஒரு மாற்றமும் நிகழ்ந்து விட போவதில்லை. ஆற்றல் மிக்க செயல் திறன் வீரர்களாக நாம் மாறும் பொழுது தான், மாற்றம் என்ற ஒன்று நிகழ்கிறது. இதுவே நிதர்சனம் என்பதை ஆற்றல் மிக்க செயல்வீரர்களாக வாழ்ந்தவர்கள் எமக்கு வழிகாட்டி சென்றிருக்கிறார்கள். அவர்களை பின்பற்றினாலே சமூக முன்னேற்றம் நிகழ்ந்துவிடும். ஆசைய்யாவின் சொந்தங்கள் பாரெங்கும் விஸ்தரித்து சீரும் சிறப்புமாக வாழும் இவ் நேரத்தில், ஆசைய்யாவின் இழப்பு என்பது எவராலும் தாங்கிக்கொள்ள முடியாத துயராக அமைகிறது. அவரது இறுதிக் கிரியைகளில் வந்து கலந்து அவரை வழியனுப்பி வைக்க முடியாமல் போனதையிட்டு உறவுகளான நாம் மனம் வருந்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் பிள்ளைகளான எனது தவமாமி ,தேவி மாமி, ஜெயமாமிக்கும் மற்றும் அவரின் பேரப்பிள்ளைகளான பாபுஜி, சஜீவன், சங்கீதா, நிரோஜன், கார்த்திகா, அபிராமி, சாரங்கன், ஆரணி, அலெக்ஸ் மற்றும் சோபிகா ஆகிய என் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனம் உவந்த ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து, ஆசைய்யா விட்டு சென்ற வாழ்க்கை நெறிகளை பின்பற்றி, கடின உழைப்பு, அற நெறி தவறாமல் கொள்கைப்பிடிப்போடு சமூக மேம்பாட்டை இலக்காக கொண்டு செம்மையாக வாழ்வோமாக.

பண்ணாகம் என்ற எமது சிறப்பான ஊருக்கும் அதன் பண்பாட்டு வாழ்வியலுக்கும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக எங்கள் ஆசைய்யாஎன்றும் விளங்கி நிற்பார். 95 வருடங்கள் பண்ணாக மண்ணில் அனைவரினது அன்பையும், ஆசியையும் பெற்று, எளிமையாக வாழ்ந்த பண்பாளன் தற்போது அமரத்துவம் அடைந்துவிட்டார். எங்களுக்கு மட்டுமில்லை ஊரில் பலருக்கும் இவர் ஆசைய்யாவாகவே அழியா நினைவுகளுடன் என்றும் வாழ்வார். எங்கள் ஆசைய்யாவுக்கு, எனது இறுதிமரியாதையை இத் தருணத்தில் தெரிவித்து, அவரைப்பற்றி எனது உணர்வுப்பகிர்வை எழுத அரிய வாய்ப்பை தந்த எனது ஜெயாமாமிக்கும் இத்தருணத்தில் நன்றிகளை தெரிவித்துக்கொண்டு, இந்த பகிர்வை நிறைவு செய்கிறேன்.

நன்றி
அன்புடன்
வி.இராகுலன்
08/09/2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கட ஐயா..........**

ஐயா என்பது வெறும் வார்த்தையல்ல அதில் அன்பு, அக்கறை, பாசம் என்று அத்தனையும் அடங்கியது. ஐயா இன்று நீங்கள் எங்களுடன் இல்லை. உங்கள் நினைவுகளைப் பற்றி நான் எழுதுகின்றேன் என்று நினைக்கையில் கண்கள் கலங்குகின்றது.

ஐயா உங்களைப்பற்றி நான் என்ன சொல்வது எதைச் சொல்லுவது, உங்களைப்பற்றிச் சொல்வதற்கு வார்த்தைகளை அகராதியில் தான் தேட வேண்டும். ஏன் எனில் நீங்கள் எமக்கு அவ்வளவு செய்திருக்கின்றீர்கள். நான் நேசறி, இரண்டாம் வகுப்பு படிக்கும்போதெல்லாம் பின்னேரம் நீங்கள் பெரியம்மாட்ட போகும் போது என்னையும் சைக்கிளில் ஏத்தீட்டு போவிங்கள். வருடப்பிறப்பு, தீபாவளி, பிறந்தநாள் எண்டால் சட்டை வாங்குவதற்கு காசு தருவீங்கள். அன்பையும் பாசத்தையும் அள்ளி வழங்கினீங்களே எப்படி உங்களை மறக்க முடியும்.

Classக்கு போயிட்டு வீட்டுக்கு வர நேரம்சென்றால் எங்க ஆரணியக் காணேல எங்க போயிட்டாள் என்று அக்கறையா விசாரிப்பீங்களே.. இனி யார் இப்பிடி அக்கறையாக விசாரிக்க. நாங்கள் சங்கானைக்கு போனால் ஐயான்ட கடை இருக்கு எண்டு கொஞ்சநேரம் உங்களோட இருந்திட்டு இளைப்பாறீட்டு வீட்டுக்கு வருவம் இனி நாங்கள் என்ன பண்ணுறது.

"இண்டைக்கு பிறையடி, பிறை தெரியுதோண்டு பார்" எண்டு சொல்லுவீங்க கடைசிக்கு முதல் வந்த பிறைகூட உங்களோட சேர்ந்து பார்த்தனாங்கள். இனி யார் சொல்லுவினம் பிறை பார்க்கசொல்லி. இண்டைக்கு பௌர்ணமியாம், அமாவாசையாம் என்பது நீங்கள் விரதம் இருக்குறதால தான் தெரிகின்றது. இனி எங்களுக்கு அமாவாசையும் தெரியாது. பௌர்ணமியும் தெரியாது. வீட்டில் நடக்குற ஒவ்வொரு செயற்பாடும் உங்களை ஞாபகப்படுத்திகிட்டே இருக்கு ஐயா. எப்படி மறக்க முடியும் ஐயா உங்களை. நீங்கள் தினமும் கலண்டரில் திகதி பார்த்துக் கிழிப்பீங்க. இப்ப கலண்டர் வெறிச்சோடிப்போய்கிடக்கு. 5மணி, 5.30க்கு எல்லாம் நீங்கள் எல்லாரையும் எழுப்பிப்போடுவீங்க. ஒருநாள் பள்ளிக்கூடம் போகாட்டியும் ஏன் போகேல? இண்டைக்கு பள்ளிக்கூடம் இல்லையோ? என்று அக்கறையா விசாரிப்பீங்கள். ஏதாவது வருத்தம் எண்டால் அக்றையாக் கேப்பிங்கள். "ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் அவளைக் காட்டு" காசு வேணுமோ இந்தா பிடி கொண்டு போ என்று சொல்லித் தருவீங்கள். இனியார் எங்களை அக்கறையாய் பாப்பினம்

ஐயா!......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட உடம்பில உயிர் இருக்கும் வரை உங்களை மறக்க மாட்டோம் ஐயா. என்றும் எங்கட நினைவில் நீங்கள் இருப்பீர்கள் உங்களுக்கு நான் பேர்த்தியாய்ப் பிறந்தது நான் முன்ஜென்மத்தில செய்த புண்ணியம் எண்டே சொல்ல வேண்டும். அடுத்தவொரு ஜென்மம் எனக்கிருந்தால் உங்களுக்கே பேர்த்தியாய்ப் பிறக்க வேண்டும் என்று கடவுளை வேண்டிக்கொள்கின்றேன்.

இப்படிக்கு<br>உங்கள் நினைவால்வாடும்<br>அன்புப் பேர்த்தி கு.ஆரணி

**மாமா ஒரு தெய்வப்பிறப்பு...**

தனது மகளை 1985 இல் திருமணம் முடித்துக் கொடுத்ததிலிருந்து அவரோடு தொடங்கிய பந்தம் இறுதிவரை மரியாதையுடனும் அன்புடனும் தம்பி என்றே அழைத்து வந்தார். ஒரு பொழுதும் பெயர் சொல்லி அழைத்தது கிடையாது. என்னையும் தனது மகனாக எண்ணியிருந்தார். எனக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டபோது அதை எண்ணி மிகுந்த கவலை அடைந்தார். தினமும் காலை, மாலை என்று வீட்டிற்கு வருவார்.

தம்பி எப்படி இருக்கிறார் ? தம்பிக்கு சுகமோ என்று விசாரிப்பார். அவர் ஓய்வு எடுத்து நான் பார்த்ததே இல்லை. எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தவர். தினமும் சங்கானை கடைக்குச் செல்வார். தனது இறுதி மூச்சுவரை ஓய்வின்றி உழைத்தவர் அவரின் எண்ணம் போல அவரது மரணமும் வந்தமைந்தது. மாமாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

மாமாவின் பிரிவால் துயருறும்<br>மருமகன் ந.முத்துலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர்

நான் பிறந்து மொழி பயின்றது முதல் இற்றை வரை ஐயாவுடனே வாழ்ந்திருக்கிறேன். எனக்கு எல்லாமுமாக இருந்த ஐயாவின் நினைவு மலருக்கு அவரின் நினைவலைகளை எழுதும் போது ஆற்றொணாத்துயர் அடைகின்றேன். எழுத வார்த்தைகள் வரவில்லை. அவருடன் வாழ்ந்த காலங்கள் என் உயிருள்ளவரை நினைவில் இருக்கும். அது ஒரு பொற்காலம்.

மார்மேலும் தோள்மேலும் தூக்கி வளர்த்து, சைக்கிளில் ஏற்றிச்சென்று கூடாரவண்டிலில் கூட்டிச் சென்றவர். தற்போது என்னைத் தனியே தவிக்க விட்டுச் சென்றுவிட்டார் சிவலோகம். தனது 17 வயதில் உழைக்கத் தொடங்கியவர். 95 வயதுவரை ஓய்வு இன்றி எமக்காக உழைத்தார். தான் மேற்கொண்ட வியாபாரத்தில் கண்ணியம், நேர்மைமிக்கவர். தேங்காய் வியாபாரத்தில் ஏறத்தாழ 80 ஆண்டுகள் கோலோச்சியவர். தேங்காயினை எடுத்து சுண்டி, குலுக்கி, பார்த்து நல்ல தேங்காயா அல்லது கூடாத தேங்காயா? என்று கணத்தில் கூறிவிடுவார். அவ்வாறான கைப்பக்குவம் அவருக்கும் தேங்காய்குமிடையில் வாடிக்கையாளருக்கு அவரின் பெயர் தெரியாது. அவரை அப்பாப்பிள்ளை அண்ணை என்றும், அப்பர் அண்ணை என்றும், மு என்றும் அழைப்பதையே கேட்டிருக்கிறேன்.

உறவுகளோடும் சரி, ஊரவர்களோடும் சரி, வாடிக்கையாளருடனும் சரி எவருடனும் பகை என்பதே கிடையாது. எல்லோருடனும் பாசத்துடனும் இன்முகத்துடனும் பழகிய உள்ளம். தனது பிள்ளைகள், அக்காமாரின் பிள்ளைகள், அண்ணரின் பிள்ளை, தம்பியின் பிள்ளைகள், தங்கச்சியின் பிள்ளைகள் என்று எல்லோர் மேலும் மிகுந்த பாசம் மிக்கவர். எவரையும் பிரித்துப் பார்த்தது கிடையாது. எல்லோரையும் தன் பிள்ளைகளாகவே கொண்டாடி மகிழ்ந்தார். அண்ணரின் மகன் ஐங்கரன் இளம் வயதில் நஞ்சு குடித்து இறந்ததைச் சொல்லிக் கவலைப்படுவார். வசந்தன் போராட்டக் களத்தில் வீரச்சாவினை தழுவிய செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தார். இவ்வாறு பலவற்றைக் கடந்தும், பலவற்றை அறிந்தும் வாழ்ந்து வந்தார். தனது 86 வயதில் சிங்கப்பூர் சென்று அக்காமாரின் பிள்ளைகள் உறவுகளைச் சந்தித்து மகிழ்ந்திருந்தார். தனது இறுதிக்காலம் வரை உழைத்தவர். எனக்கு அடிக்கடி கூறுவார் தன்னைப் படுக்கையில் போடாமல் கடவுள் கொண்டு போயிடணும் என்று. அவரின் எண்ணம் போலவே அவரின் மரணமும் அதிசயமாக ஒரு கணப்பொழுதில் நிகழ்ந்தது. ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் அதிகாலை 5.00 மணியை தாண்டி அவர் உறங்கியது கிடையாது. அருகில் இருக்கும் செம்பரத்தம் வைரவப் பெருமான் மீது மிகுந்த பக்தி மிக்கவர். தினமும் பூ பறித்து சென்று அவருக்கு சாத்தி வழிபடுவார். அமாவாசை, பூரணை விரதங்களை மாதந்தோறும் தவறாது பிடித்தார். பிறை பார்க்கத்தவறுவதில்லை. மூன்றாம் பிறையை நினைவுபடுத்தி அதனை பார்த்து வணங்குவார். ஆயிரம் பிறை கண்டு பெருவாழ்வு வாழ்ந்த பெருமகனார் அவர். அவரின் ஒவ்வொரு சொல்லும் செயலும் ஆயிரம் அர்த்தங்கள் நிறைந்தவை. நீடுலகில் 95 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார் என்பது சாதனை. எமக்கெல்லாம் அது பெருமை. அவர் பேரனாக பிறந்து இறைவன் எனக்கு கொடுத்த வரம். தனக்கென்று எதையும் வாங்காதவர். அவர் ஏதாவது வாங்கினால் அது உறவுகளுக்காக மட்டுமே இருக்கும். அவரது உள்ளம் போல், எண்ணம் போல் அவர் அணியும் உடையும் வெள்ளை. வெள்ளை வேட்டியும் வெள்ளை சேட்டுமே அணிவார். வேறு எந்த நிறங்களிலும் அவர் உடை அணிந்ததே இல்லை. அவரிடமிருந்து எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளலாம். பின்பற்றலாம். பிறந்ததிலிருந்து இறுதிவரை சைவ உணவினை மட்டும் சாப்பிட்டவர். என்றும் எப்போதும் எளிமையாகவே வாழ்ந்தவர். அவரின் வாழ்க்கைமுறையினை போன்று எவராலும் வாழ முடியாது.

வீட்டில் ஒரு பசுமாடு கட்டாயம் வளர்க்க வேண்டும் என்று கூறுவார். தனது இறுதிக்காலம் வரை பசுவினையும் வளர்த்து வந்தார். மாடுகளை வண்டிலில் பூட்டி ஓட்டுவது அவருக்கு கைவந்த கலை. நாற்பது வருடங்களுக்கு மேலாக மாடுகளும், கூடார வண்டிலும் வைத்திருந்தவர்.

தீபாவளி; வருடப்பிறப்பு, விஷேட தினங்கள் வரும் போது காசுப்பையுடன் வந்து உடுப்பு வாங்க எவ்வளவு காசு வேணும் என்பார். கேட்கும் காசினை விட அதிகமாகத் தந்து பிடித்ததை வாங்கு காசு காணாவிடில் கேள் என்பார். இனியும் வருடப்பிறப்பு, தீபாவளி எல்லாம் வரும் ஆனால் காசுப்பையுடன் வந்து ஐயா தான் காசு தரமாட்டார்.

ஐயா எனக்கு அடிக்கடி கூறும் வார்ததைகள் எவருடனும் பகைக்க கூடாது. நேர்மையாக இருக்க வேண்டும். சிறிய வருத்தம் இருந்தாலும் ஏலாது என்று இருக்க கூடாது. அதிகாலையிலே எழும்ப வேண்டும். முயற்சி இருக்க வேண்டும். கோயிலுக்கு போக வேணும். உறவுகளின் வீடுகளுக்குப் போய் வரவேண்டும். அவசர நிலையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எல்லாருக்கும் முடிந்தவரை உதவ வேண்டும். நான் இல்லாட்டியும் மனம் தளராது நன்றாக வாழ வேண்டும் என்பார். நான் கேட்டு இதுவரை எந்தப்பொருளும் வாங்கித்தராமல் இருந்தது கிடையாது. எங்கு சென்றாலும் சொல்லிப்போட்டு போகிறவர். இன்று மட்டும் ஒன்றும் சொல்லாமல் சென்றுவிட்டார். அவரை அம்மப்பா என்று அழைத்ததே கிடையாது. ஐயா என்றுதான் எப்போதும் அழைப்பேன். கணந்தோறும் அன்பையும் பாசத்தையும் ஊட்டி வளர்த்தவரை கண்ணிமைக்கும் நேரத்தில் காலன் கவர்ந்திட்டான். இப்படியான உறவினை எந்த ஜென்மத்திலும் காணமுடியாது. மீண்டும் பிறப்பிருந்தால் உங்களுக்கே மீண்டும் பேரனாக வந்து பிறக்க வேண்டும். எனக்கு தாயாக, தந்தையாக, அண்ணனாக, தம்பியாக, நண்பனாக எல்லாமுமாக இருந்த தாயுமானவர் நீங்கள்.

சொர்க்கத்தில் நிம்மதியாக உறங்குங்கள். 95 வருடங்கள் எமக்காக ஓய்வின்றி உழைத்தீர்கள் இனியாவது ஓய்வெடுங்கள். உங்கள் நினைவுகளோடும் நீங்கள் கூறிச்சென்ற வார்த்தைகளுக்கு உயிர்கொடுத்து வாழ்வேன். அதற்கான மனத்தையிரியத்தையும் ஆசிகளையும் நீங்களே எனக்கு தரவேண்டும். சொர்க்கத்திலிருந்து வழிப்படுத்துங்கள்.

உங்கள் ஆத்மா நீங்கள் தினமும் வணங்கும் செம்பரத்தம் வைரவப்பெருமானின் பாதாரவிந்தங்களைச் சென்றடைய பிரார்த்திக்கின்றேன்.



என்றும் உங்கள் நினைவுகளோடு
உங்கள் பேரன் பாபு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் ஆசௌச விளக்கங்களும் அதற்கான கால எல்லைகளும்

### ஆசௌசம் என்றால் என்ன ?

ஆசௌசம் என்பது சுத்தமின்மை எனப் பொருள்படும். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரிகைகளைச் செய்கிறவனுக்கு அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். இது தீட்டு, துடக்கு எனவும் அழைக்கப்படுகின்றது. இந்த ஆசௌசம் 10 வகையாக ஏற்படலாம் எனச் சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன,

1) பிறத்தல்
2) இறத்தல்
3) சுடுதல்
4) பிரேதத்தின் பின் செல்லல்
5) சுமத்தல்
6) அழுதல்
7) ஆசௌசியின் அன்னம் புசித்தல்
8) ஆசௌசிகளுடன் கலத்தல்
9) முகச்சவரம் செய்யாமை
10) சபிண்டீகரணம் செய்யாமை

பிறப்புத் தீட்டிலும் இருமடங்கு வலிமையுடையது பூப்படைதல். அதைவிட இருமடங்கு மரணத்தினால் ஏற்படும். தீட்டை விட இறந்தவரைத் தகனம் செய்வதால் ஏற்படும் தீட்டு இருமடங்கு வலிமையுடையது எனக் காமிகம் கூறுகின்றது.

### ஆசௌசம் கடைப்பிடிக்கப்படும் நாட்கள்

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்கு 10 நாட்கள், மச்சமாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் நற்சூத்திரத்திற்கு 15 நாட்கள், ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசமாகும். ஆலயங்களில் தொண்டு செய்யும் சிவகன்மருக்கு 20 நாளும், திராவிடகானம் பாடவல்லவருக்கு 15 நாளும் ஆசௌசம் காக்கப்படல் வேண்டும் என்ற குறிப்பும் உண்டு. இது அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மேலே கூறப்பட்ட விதி விலக்கைச் சாதகமாகப் பயன்படுத்தியே பாரத தேசத்தில் சில பகுதியினர் 21ஆம் நாளும், யாழ்ப்பாணத்தில் ஒரு பகுதியினர் 16ஆம் நாளும் துடக்குக் கழிக்கின்றனர். இதற்குச் சாஸ்திர பிரமாணம் எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருவருடைய ஆசௌசம் அவர் சார்ந்த யாருக்கு வரும்

ஓர் ஆண்மகனுக்கு அவனுடைய தந்தை, தந்தையின் தந்தை தந்தையின் தாத்தா, தந்தையின் தாத்தாவின் தந்தை, தந்தையின் தாத்தாவினது தாத்தா அவரது தந்தை என அறுவரும் அவ்வறுவருடைய மகன், மகனின் மகன், பேரனின் மகன் - பேரனின் பேரன் - பூட்டனின் மகன் - பூட்டனின் பேரன் என அறுவரும் தானுமாக எழு தலைமுறையினருக்கு வரும் என ஆகம நூல்கள் கூறுகின்றன. இவர்கள் சபிண்டர் எனவும் ஞாதிகள் எனவும், உறவினர் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

### ஆசௌச வகைகள்

**01. ஜனன ஆசௌசம் (பிறப்பு சம்பந்தமான துடக்குகள்)**

ஆண் குழந்தை பிறந்தால் 30 நாளும் பெண் குழந்தை பிறந்தால் 40 நாளும் தாய்க்கு ஆசௌசம் உண்டு.

ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், உறவினர்களுக்கும் பூரண ஆசௌசம் உண்டு

பெண் குழந்தை பிறந்தால் குழந்தையின் சகோதரர், தந்தை, தந்தையின் உடன் பிறந்தோர், அவர்களது புதல்வர்கள், தந்தையின் தந்தை, அவருடன் பிறந்தோர் ஆகியோருக்கு பூரண ஆசௌசம் உண்டு.

நிறைமாதத்தில் குழந்தை இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் மரண ஆசௌசம் இல்லையெனினும் ஜனன ஆசௌசம் பூரணமாக உறவுகள் யாவர்க்கும் உண்டு.

7ஆம், 8ஆம் 9ஆம் மாதங்களில் குழந்தை இறந்து பிறந்தாலும் தாய், தந்தையருக்குப் பூரண ஆசௌசம் உண்டு. உறவினருக்கு கேள்விப்பட்டதும் ஸ்நானத்துடன் சுத்தமாகும்.

கர்ப்பம் கரைந்தால் அல்லது கருச்சிதைவு ஏற்பட்டால் எத்தனையாம் மாதத்தில் அது நிகழ்ந்ததோ அத்தனை நாள் துடக்கு தாய்க்கு மட்டும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழந்தை பிறந்து ஆசௌச நீக்க தினத்தின் பின்னர் அச் செய்தியறிந்தால் தந்தை ஸ்நானத்தால் சுத்தமடைகின்றார். ஏனையோருக்கு ஆசௌசமில்லை.

**02. மரண ஆசௌசம் [இறப்பு சம்பந்தமான துடக்குகள்]**

பொதுவான மரணத்துடக்குகள் அந்தணருக்கு 10 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் உண்டு.

**ஆண்குழந்தை**

குழந்தை பிறந்து துடக்கு கழியமுன் இறந்தால் பெற்றோருக்கு மட்டும் பூரண ஆசௌசம் உண்டு. ஏனையோருக்கு ஸ்நானத்தினால் சுத்தமாகும்.

3 வயதுக்கு மேல் உபநயனம் செய்யுமுன்னிறந்தால் அல்லது ஏழு வயதிற்கு முன்னிறந்தால் அந்தணருக்கு 3 நாள். ஏனையோருக்கு 9 நாள். பெற்றோருக்கும் சகோதரருக்கும் பூரண ஆசௌசம் உண்டு.

ஏழு வயதிற்கு மேல் ஒரு பிள்ளையிறந்தால் பெற்றோருக்கும் சகோதரருக்கும் பூரண ஆசௌசம் உண்டு.

**பெண்பிள்ளை**

மூன்று வயதுக்குட்பட்ட பெண் குழந்தை இறந்தால் பெற்றோருக்கும் சகோதரருக்கு மட்டும் ஆசௌசம் உண்டு. உறவினருக்கு ஸ்நானத்துடன் நீங்கும்.

மூன்று வயது முதல் எட்டு வயது வரையான பெண்பிள்ளை இறந்தால் அந்தணராயின் ஒரு நாளும் ஏனையோர் 9 நாளும் காக்க வேண்டும். பெற்றோருக்கும் சகோதரருக்கும் பூரண ஆசௌசம் உண்டு

திருமணமான பெண் இறந்தால் அவளது தந்தை வழி உறவினருக்கு ஆசௌசம் இல்லை. கணவனுக்கும் அவனது உறவுகளுக்கும் பூரண ஆசௌசம் உண்டு.

**03. விசேட விதிகள்**

1. ஒருவர் இறந்தால் அவரது தாயின் தந்தை, தந்தையின் தந்தையின் தாய், தாய்மாமன், மனைவி, பெண்கொடுத்த மாமனார், பெண்கொடுத்த மாமியார், தாயின் சகோதரிகள், தாயின் சகோதரர்கள் முதலியோர் அந்தணராயின் 3 நாளும், ஏனையோர் 9 நாளும் ஆசௌசம் காக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரு பிறப்புத்தீட்டைக் காத்துக்கொண்டிருக்கும் போது இன்னொரு பிறப்புத்தீட்டு வருமாயின் பெற்றோர் பூரண ஆசௌசம் காக்கவேண்டும். உறவினருக்கு முதலாவது ஆசௌசக் கழிவுடன் இரண்டாவது கழிந்துவிடும்.

3. ஒரு மரண ஆசௌசத்தின் நடுவில் ஒரு ஜனன ஆசௌசம் வந்தால் அது முந்திய மரண ஆசௌச முடிவில் கழிந்துவிடும். ஆனால் குழந்தையின் பெற்றோருக்கு மட்டும் அவர்களது ஜனன ஆசௌசம் பூரணமாகவுண்டு.

4. ஓர் ஆசௌசம் காத்துக்கொண்டிருக்கும் போது இன்னொரு மரண ஆசௌசம் வந்தாலும் அது முந்திய துடக்குடன் கழனிந்துவிடும். ஆனால் தாய் தந்தை கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் இறந்தால் புதிய தீட்டை முழுமையாகக் காக்க வேண்டும்.

**விசேட விதிவிலக்குகள்**

1. தற்கொலை மரணத்தினால் தகனம் செய்தவர்களுக்கு மட்டும் ஆசௌசம் உண்டு. மற்றையோருக்கு இல்லை

2. தற்கொலை செய்து இறந்தவருக்கு மந்திரமில்லாமல் தகனம் செய்து ஆறுமாதம் கழிந்த பின்பே கிரிகைகள் செய்ய வேண்டும்.

3.யுத்தத்தில் வீரமரணம் அடைந்தோருக்கு உடனே கிரிகைகள் செய்யலாம். இம் மரணத்தால் உறவினருக்கு ஆசௌசம் இல்லை.

**விசேட விதிவிலக்குகள்**

ஆசௌச காலத்தில் நித்திய கர்மாநுஸ்டானங்களை மந்திரம் உச்சரிக்காது மானசீகமாகச் செய்யலாம். நித்திய விரதங்களை அனுஷ்டிக்கலாம்.

தமது தலைமுறையிலுள்ளோரைக் குறித்து சிரார்த்தம், மாசிகம் முதலியன செய்யும் தினம் ஆசௌச காலத்தில் வரின் ஆசௌசம் நீங்கிய தினத்தில் அதனைச் செய்யலாம். சிரார்த்தம் ஆரம்பித்த பின் தெரியவரின் சிரார்த்தம் நிறைவுபெறும் வரை ஆசௌசம் இல்லை.

ஆசௌசியின் பொருட்கள், அன்னம் முதலியனவும் ஆசௌசம் என்பதால் அவருடன் கலத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானியம், பொன், பசு ஆடு, வெல்லம், நெய், எள்ளு, கரும்பு, காய்கறி, தண்ணீர், உப்பு, விறகு, எண்ணெய், மருந்து, அரிசி இவற்றிற்கு ஆசௌசம் இல்லை.

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் சேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு ஜீரணிக்கும் வரை ஆசௌசம் உண்டு. அறிந்து புசித்தால் ஆசௌசியின் அசௌசக் கழிவுவரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்க வேண்டும்.

### பூப்பு ஆசௌசம்

மாதவிலக்கு காலத்தில் ஒருபெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்துகொள்ளலாம். 20 நாளின்மேல் பூப்பு வந்தால் மேற்கூறிய முறையில் கடைப்பிடிக்கலாம். 20 நாட்களின் முன் வந்தால் ஸ்நானத்தால் சுத்தமாகும். அதை மாவிலக்காகக் கொள்வதில்லை.

பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமையும் போதும் பின்னர் மாவிலக்காகும் போதும் அப் பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றியிருந்தால் அவர்களுக்கு தீட்டில்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப் பெண் வீட்டின் சகல பகுதிகயிலும் நடமாடுவதனாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்புபடுவதானாலும் ஏனையோருக்கும் காக்கப்படவேண்டி நேர்கின்றது.

### கிராம ஆசௌசம்

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் துடக்கு இருப்பதால் கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, அனுட்டானம் போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தைவிட்டு அகற்றப்பட் பின்னர் பிராயச்சித்தம் செய்து கர்மானுட்டானங்கள் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர், ஆனால் ஓர் எல்லைக்கு அப்பால் அதாவது பூசைக்கான கைமணி அடிக்கும் ஓசைகேட்கும் தூரம் அல்லது சுமார் 55 யார் தூரத்தை ஆசௌச எல்லையாக எடுத்துக்கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக் கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் துடக்குக் காக்கலாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிஷ்டை முதலிய கிரிகைகளுக்கு நடுவில் கிராமத்தின் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற்குச் சேர்த்த பின்னர் தொடர்ந்து கிரிகை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் துடக்கு இல்லை. பிரேதத்தை தொட்டவர், தூக்கியவர், பின்னே சென்றவர்கள் துடக்கு உடையவர்கள்.

துடக்கு நாட்களில் வைதிக முறையிலே முத்தீ வளர்க்காதவர்களுக்கு இறந்த நாள் முதல் கணிக்கப்படல் வேண்டும். சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல் கணிக்க வேண்டும். இரவில் பிறப்பு, இறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்கும் முன் உள்ள நாளே கொள்க. மேலைநாட்டு முறைப்படி இரவு 12.00 மணிக்குப்பின்னர் அடுத்த நாளாகக் கொள்ளக் கூடாது.

**தீட்டானவர்கள் செய்யக்கூடாதவை**

ஆலயத்துள்ளே தீட்டுடன் சம்பந்தப்பட்டவர் செல்லக்கூடாது. ஆசௌசத் தொடர்புடையவர் ஆசௌசம் இல்லாதவரைத் தீண்டக்கூடாது. ஆசௌசம் உள்ளவர் ஆசௌசம் இல்லாதவரை வணங்கக்கூடாது. அதேபோல் ஆசௌசம் இல்லாதவர் ஆசௌசம் உள்ளவரை வணங்கக்கூடாது. ஏகாதசி, துவாதசி, பிரதோஷ விரதத்தொடர்புடையவர்கள் விரத்தை நிறுத்த வேண்டியதில்லை. உபவாசம் இருக்கலாம். பூசை செய்யக்கூடாது. தொடக்குக் காலத்தில் கட்டில் மெத்தை என்பவற்றில் படுக்கக் கூடாது. வெற்றுத் தரையில் படுத்தெழும்புவது நல்லது. உருத்திராட்சம் அணியக்கூடாது.

**தனிஷ்டா பஞ்சமி தோஷம்**

தனிஷ்டா பஞ்சமி தேசம் என்பது அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி அகிய நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் தனிஷ்டா பஞ்சமி தோசமாகும். பஞ்சமித் திதியில் எவ்வித தோஷமுமில்லை. அவிட்டம், சதயம் ஆகிய நட்சத்திரங்களுக்கு ஆறுமாதங்கள் தோஷமாகும். பூரட்டாதி, உத்திரட்டாதி நட்சத்திரங்களுக்கு மூன்று மாதங்களும் ரேவதி நட்சத்திரத்துக்கு ஒன்றரை மாதமும் தோஷமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிஷ்டா பஞ்சமி தோஷம் நீங்கச் செய்யவேண்டிய காரியங்கள்

ஆசௌசம் நீங்கும் வரை தீபம், பசு, நீர், பூரண கும்பம் என்பனவற்றை ஒவ்வொருநாளும் இல்லத்தில் வைத்தல் வேண்டும். நவதானியம், எள்ளு, நெற்பொரி, என்பவற்றை இல்லத்து வளவெங்கும் தூவுதல் வேண்டும். நீற்றுப் பூசணிக்காயை வாயிலில் கட்டுதல் வேண்டும். பயநிவர்த்தி நூல் என்பன கட்டுதல், தர்ப்பையினை ஆள் உருவம் செய்து தகனம் முதலியவற்றை குரு மூலமாக பஞ்சமிர்தோச நிவர்த்தி சாந்தி செய்தல். யமனை எருமை வாகனத்தில் செப்புத் தகட்டில் கீறி பூஜித்து தானமாகக் கொடுத்தல். நவக்கிரகம், மஹாலட்சுமி, பார்வதி, பரமேஸ்வரன் முதலிய தெய்வங்களைப் பூஜித்தல், ஹோமம் செய்தல். தசதானங்கள் வழங்குதல். என்பன தனிஷ்டா பஞ்சமி தோஷநிவர்த்தி செய்துகொள்ளப்படல் வேண்டும்.

## அபரக்கிரிகைகளில் கவனிக்க வேண்டியவை

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே சங்கற்பித்துக் கிரிகைகளைச் செய்தல் வேண்டும். தந்தைக்கு மூத்த புதல்வனும், தாய்க்கு இளைய புதல்வனும் கிரியை செய்யும் வழக்கம் உள்ளது. புத்திரன் அல்லாத வேறு உறவினர் ஒருவர் கிரியை செய்வதாயின் அவர் தனது பெற்றோரில் ஒருவருக்காவது முன்னர் கிரிகை செய்திருத்தல் வேண்டும். இன்றைய வாழ்க்கைச் சூழலில் கிரிகை செய்ய அதிகாரம் பெற்றவர் வெளிநாட்டிலிருந்தோ, தூர தேசத்திலிருந்தோ வந்து கிரிகை செய்துவிட்டு சில நாட்களில் திரும்பிச் சென்றுவிடலாம். அந்தியேட்டிக் கிரியைக்கு அதிகாரம் பெற்றவர் நிற்க முடியாது. இந் நிலமையை முன்னமே புரிந்து கொண்டால் கிரியை நாயகர் வர்ணக்கிரியை செய்யக்கூடியவர்கள் பட்டியலில் தமக்கடுத்து உள்ளவரும் அந்தியேட்டி முடியும் வரை நிற்கக்கூடியவருமான ஒருவரைத் தன்னுடனாக்கி மரணக்கிரியை செய்ய வேண்டும். பின்னர் கிரியை நாயகர் விட்டு நீங்கினாலும் உடனிருந்தவர் அந்தியேட்டி முதலான ஏனைய கிரியைகளைத் தொடரலாம்.

## ஆபத்து வேளையில் ஆசௌசம்

நாட்டிற்கோ கிராமத்திற்கோ, குடும்பத்திற்கோ ஆபத்து நேர்ந்த வேளையில் ஆபத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆசௌசம் தடையாகாது. உடனடியாக உதவி தேவையானது எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் தயங்காமல் உதவலாம். ஆபத்தில் நின்றும் காப்பாற்றுவதற்காக மற்றொரு வீட்டினுள் புகுதலோ, ஆசௌசம் இல்லாத ஒருவரைத் தூக்கிவருதலோ, பிடித்துவருதலோ வேற்றுப் பெண்ணொருவரைத் தூக்கி வருதலோ பிழையாகாது அச்செயல் புண்ணிய செயலாகக் கருதப்படும்.

### சிரார்த்த கருமங்களுக்குத் தேவையான பொருட்கள்

என், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சக்கரை, தேன், பசுநெய், பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சைப்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

### சிரார்த்த கருமங்களுக்கு ஆகாத பொருட்கள்

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசணிக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெண்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

### சிரார்த்த தினத்திலே செய்யக்கூடாதவை

தயிர்கடைதல், நெய் ஊற்றுதல், நெய்முதலிய பொருட்களை கொடுத்தல், வாங்குதல், கண்ணீர்விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

### சிரார்த்தத்திற்கு உபயோகமாகும் மலர்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவட்டை, எருக்கம்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

### சிரார்த்த காரியத்தின் சில பொது விடயங்கள்

ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிரார்த்தம் நிச்சயிக்கப்படுகின்றது. ஒரு மாதத்தில் இரு தடவைகள் சிரார்த்த திதி வந்தால் பின்னைய திதியினைக் கைக்கொள்ளல் வேண்டும். சிரார்த்தம் செய்யும் தினத்தில் ஆசௌசம் இருக்குமாயின் குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆசௌசம் கழிந்த தினத்தில் அச் சிரார்த்தம் செய்யப்படல் வேண்டும். ஆசௌசம் கழிந்த தினத்திலே சிரார்தம் முடியாவிட்டால் அம்மாத அமாவாசையில் அல்லது ஆடி அமாவாசையில் தந்தைக்கும், தாய்க்கு சித்திரா பூரணையில் அச் சிரார்த்தம் செய்யப்படல் வேண்டும்.

**சிரார்த்த தினத்திலே பெண்ணின் நிலைப்பாடு**

சிரார்த்தம் செய்யும் கர்த்தாவின் மனைவி வீட்டுக்கு விலக்காக இருந்தால் அன்று சிரார்த்தம் செய்யாது மனைவிக்கு வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாள் செய்தல் வேண்டும்.

விதவைப்பெண் வீட்டு விலக்காயிருக்கும்போது தன் கணவனுடைய சிரார்த்தம் வந்தால் வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாளே சிரார்த்தம் செய்யப்படல் வேண்டும்.

சிரார்த்தத்திற்காகச் சமையல் ஆரம்பமாகிய பின்பு ஆசௌசம் வந்தால் அச் சிரார்த்தம் முடியும்வரை அந்த ஆசௌசம் அவற்றைப் பற்றாது.

இம்மலரில் ஆசௌசம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட விடயங்கள் யாலும் அகில இலங்கை இந்துமாமன்றப் பொன் விழா வெளியீடான “ இந்து மக்களுக்கு ஒரு கையேடு” என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

நம் குடும்பம் நலம்பெறவே
நன்குணர்ந்தே நன்னிய எம்
நல்லாளன் தன் பிரிவால்
நலிந்து துவண்டே நாம்
நாதியற்று இருந்த வேளை
நலம் பெறவே நல்வார்த்தை
நயம்படவே உரைத்திட்டோர்
நற்கிரியை பல செய்ய
நம்முடன் தோள் கொடுத்தோர்
நாடு கடந்து நின்றும்
நலவுரைகள் பல சொன்னோர்
நம் வீட்டில் நாட் பலமே
நலம் வேண்டி உடனிருந்தோர்
நல் மனதோர் அனைவருக்கும்
நன்றிகள் பல கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்ச


*பேரம்பலம் + *செல்லாச்சி

- *அப்பாப்பிள்ளை + *செல்லம்மா
  - *இராசம்மா + *நாகலிங்கம்
    - நாகேஸ்வரி*
    - நாகராஜா *
    - இராசலிங்கம்
    - வரதராஜா
    - சிவபாக்கியம்
    - செல்வராஜா
    - இராசமலர்
  - *ஆறுமுகம் + *அற்புதமலர்
    - விவேகானந்தன்
    - சிவமலர் *
    - சிவானந்தன்
    - தயானந்தன் *
    - முருகானந்தன்
    - வசந்தமலர்
    - மங்கயற்கரசி
    - திலகவதியார்
  - *பொன்னம்மா + *சுப்ரமணியம்
    - காந்தரூபன் *
    - மோகனரூபன்
    - சாந்தாதேவி
  - *இராமசாமி
    - நிர்மலாதேவி + முத்துலிங்கம்
      - பாபுஜி
      - சஜீவன்
      - சங்கீதா + கோகிலதர்சன்
      - நிரோஜன்
      - கார்த்திகா
    - லோகேஸ்வரிதேவி + குகதாசன்
      - அபிராமி
      - சாரங்கன்
      - ஆர
  - *மனோண்மணி + பாலசுப்ரமணியம்*
    - மனோகரன்
    - பாலராணி
  - *பொன்னம் + திரவிய
    - கேதீ
    - சர்வே
    - நடே
    - சகுந்
    - செல்

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்ச விருட்சம்




* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரது கூடார வண்டில்





SUJI DIGITAL PRINTERS, CHULIPURAM. 0773275598

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org